483

வ்யய௵ மாசி ௴

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 2

483

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE ... OF BOOKS
20 FEB ...
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

JL
இ22ணஉ11, N4
N4).6.2.
184230

February 1947
Vol. 6 No. 2

விஷய ஸூசிகை

			பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	....	27
2.	திவ்ய ஹவிஸ்	....	32
3.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	....	36
4.	எம்பெருமானர் ஸ்ரீ ஸூக்தியில் ஸ்ரீ தேசிகனுக்குள்ள ஈடுபாடு		37
5.	வென்று விளம்பும் வேதியன்	....	40
6.	'மத் பக்த' சப்தார்த்த விவரணம்	...	44
7.	செய்திகள்	...	46
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	...	48

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வியாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டு மென்று நியமிக்கிருர்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1947
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6 | வ்யய ௵ மாசி ௴ | ஸஞ்சிகை 2

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

—:-0-:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

———0———

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயக்ரீவ ந்ருஸிம்ஹவரதராஜாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

தர்க்கன்—இதோ இங்கே பாகீரதியின் அலைகளால் மோதப்பட்டதும், 'வாரா, நஸி' என்ற இரண்டு நதிகளால் சூழப்பட்டதும், பூமிக்குத் திலகம் போன்றதுமான 'வாராணஸீ க்ஷேத்ரம்' விளங்குகிறது.

விவேகர்—[கௌரவத்தோடு பார்த்துக் கொண்டே]

"ப்ராப்ய ஸம்ருத்திமதிகாம் அபிநவ வபுஷா
ரத்யா ஸமேத: அரதி ஸஹித: புஷ்பபாண: ।
யஸ்மிந் ஸ்வைர விஹாரே நித்ய ப்ரீதிமுபயாதி
த்ர்யம்பகாத் அக்ஷிஜாத் பயதோ நபீ: ॥"

தன்னுடைய முன் ரூபத்திலும் மிக்க அழகிய புது ஶரீரத்தைச் சக்ரபாணியின் ப்ரஸாதத்தால் பெற்று, ரதியோடு திரும்பவும் சேர்ந்து, புஷ்பபாணன், த்ரிநேத்ரருடைய மூன்றும் கண்ணன நெற்றிக் கண்ணின் அக்நிபயத்தால் இங்குத் தர்மத்துக்குக் கெடுதி செய்ய ஆசைப்படுகிறதில்லை. மேலும்:

"இஹ பரமபுருஷ ஜ்ஞாநதாம் பாவநாநாம்
நியதி வஶேந நிரூடதாம் தயாளு: ।
உபதிஶதி பதிர்வ்யயம் பஶூநாம்
உபநிஷதாமபி துர்லபம் ரஹஸ்யம் ॥"

ஆதி காரண புருஷரான ப்ரம்ஹத்தை ப்ரஹ்ம வித்யையினுல் தேடி அறிந்து த்யாநித்து ஸாக்ஷாத்கரிக்க ஶக்தி யில்லாதவரும், இந்த க்ஷேத்ரத்தில் கண் மூடும் பாக்யத்தைப் பெற்றுல், தயாமயரும் விச்வாசார்யருமான பசுபதி, அவர்களுக்குத் தாமாகவே நேரில், உபநிஷத்துக்களுக்குக் கூட எட்டாத மிக்க தாரமான ரஹஸ்யத்தை (ராம தாரக மந்த்ரத்தை) உபதேசித்து ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கிறுர்.

இந்த ச்லோகம் ப்ரபோத சந்த்ரோதயத்தில், இந்தக் காசீ க்ஷேத்ரத்தில் நடக்கும் இந்த மஹிமையைப்பற்றி அமைக்கப்பட்டது. அடியிற் கண்ட ச்லோகம், அதனிடமும் அந்த நாடக கர்த்தாவினிடமும் ஆதர பஹுமாநங்களால் பின்பற்றி [illegible] அமைக்கப்பட்டது திண்ணம்.

... நூலகம்
18925

"வாஉஉவிரு-ஷாம் வாம் நாணாம்
வ-ாவிஜயீ காணாவியெபதெ தா: ।
க்ஷயதி ஹரவா நிஹாஜகாரெ
ஹவஹயகாதாதாரகம் ஹூபொயழ ॥ "

இது ப்ரபோத சந்த்ரோதய ச்லோகம். ['தஜிஷொ: வாஉம்வஉழ' என்று கட வல்லி ஓதும் சரம காரண புருஷனை விஷ்ணுவின் ஸ்வரூபத்தை வித்யையால் அறியாதவருக்குக் கேவலம் கருணுபரவஶ மானஸராய் த்ரிபுர விஜயம் செய்த பகவான், இங்கே அந்தக் காலத்தில் ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கும் தாரக ஞானத்தை உபதேபிக்கிருர் என்பது அதன் பொருள்.] அந்த நாடகம் முழு வதிலும், விஷ்ணு பக்தியே புருஷனை ஸம்ஸாரத்திலிருந்து தாண்டுவிப்பதாகப் பலதடவை காட்டியுள்ளது. நாலாவது அங்கத்தின் முடிவில், காசீ க்ஷேத்ரத் தில் அநாதியாய்க் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆதிகேஶவ னுடைய கோவிலுக்குச் சென்று, அங்குள்ள அப்பெருமாளை ஓர் அழகிய சூர்ண கியால் விவேகராஜர் ஸ்தோத்ரம் செய்கிருர்.

'இஹ புருஷம்' என்னும் ச்லோகத்தின் பதார்த்தம்:- உஹ-இந்தக் காசீ க்ஷேத்ரத்தில், வ-ா-ஷம் வ-ாணம் அஜாநதாம்- ஆதிகாரண புருஷருடைய ஸ்வரூப ஜ்ஞாந மில்லாவிடினும், நியதிவஶேந - பாக்யவஶத்தால், நிமீலிதாம் - கண் மூடுபவருக்கு, [காசீ க்ஷேத்ரத்தில் ராமதாரக உபதேஶம் பெற்று முக்தி பெறும் பாக்யஶாலிகளுக்கு] உயாஉ-: - [(தீவ உபாஸ-ம் உயாஉ-ம்' என்று வர்ணிக்கப்பட்ட] ஆசார்ய குண பூர்த்தியையுடைய, ஸ்வயம்-ஸாக்ஷாத் தாமாகவே (வனுவில் கேவலம் கருணையால்), உபநிஷஉவி-உபநிஷத்துக்கே தாரமாயுள்ள, ['உப' என்பதற்கு 'ஸமீபத்தில்' என்பது பொருள். ப்ரஹ்ம ஸ்வரூபத்துக்கு ஸமீபத்தில் நிஷண்ணமாய் (உட்கார்ந்திருந்து) நம்மையும் அதற்குக் கிட்ட நெருங்கும்படி செய்வது உபநிஷத்து. ப்ரஹ்மம் தமக்குத்தான் கிட்ட மென் பது உபநிஷத்துக்களின் அபிமாநம். காசியில் விச்வாசார்யராகிய ஈச்வரன் உபதேசிக்கும் ராம தாரக மந்த்ரம், ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கு, உபநிஷத்துக்களை விட நெருங்கியதென்று கருத்து. 'உபநிஷத்' என்பதற்கு, 'ரஹஸ்யம்' என் றும் பொருள். உபநிஷத்தினும் மிக்க ரஹஸ்யமாகும் அம் மந்த்ரம். (விஉ்யா விஹீந: வஶ-:' [வித்யை யில்லாதவர் பசுக்கள்] என்பர். ப்ரஹ்ம வித்யை யில்லாத அஜ்ஞர் பசுக்கள் போன்றவர். அவர்களைக் காப்பாற்றும் பதியான 'பசுபதியை' 'வதி: வஶூநாம்' என்பதால் காட்டுகிருர்.

"ஸா காஶீதி ந ஶாகஶீதி ஹ-வி ஸாயொயெஉ்தி நாயஉ்ாஸஉ்தெ
ஸாவஜீதி ந கஷாஉவதி ஸா காம்ஶீதி நொஉம்அதி ।
யதெ்த ஸா உய-ரெதி நொதஉய-ப்ம் நாநஉ்ாவி ஊநஉ்ா வ-ஸீ
யா வெகாணகயாவ-யாாஸஹ-ஜாம் ரொஜெத நொ ஜெதஸெ ॥ "

[ப்ரபோத சந்த்ரோதயத்தில், நாலாவது அங்கத்தில்] விவேக மஹாராஜர், காமன் க்ரோதன் லோபன் முதலியவரை எதிர்த்து ஜயிப்பதற்காக, வஸ்துவிசாரன்

3L
Q22nm21,N4
N426

க்ஷமை ஸந்தோஷன் முதலிய போர் வீரர்களைத் திரட்டிக்கொண்டு, கங்கா தீரத்துக்கு அலங்காரமாக 'ஸரித்ஶ்ரேஷ்டாஸங்காத் ஸஹஜதந: கேஶவஸ்த்வ விஶேஷாயதநம்' என்று, ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் எழுந்தருளியிருப்பதால், காசீ க்ஷேத்ரம் மிகவும் பாவநமென்று நினைத்து அங்கேயே தம்முடைய ஸேனையைத் தங்கச்செய்தார்.

"ஏஷ தேவ: புராவித்பி: க்ஷேத்ரஸ்வாமீதி கீயதே ।
யத்ர தேஹம் ஸமுத்ஸ்ருஜ்ய புண்யபாஜோ விஶந்தி யம் ॥"

[புராவ்ருத்த மறிந்த மஹர்ஷிகள், இந்த ஆதிகேஶவப் பிரான் இந்தக் காசீ க்ஷேத்ரத்துக்கு ஸ்வாமி என்று பாடியுள்ளார்.] இங்கே தேஹத்தை த்யாகம் செய்யும் புண்யவான்கள், அந்த ஆதிகாரணப் பொருளான பகவானுக்குள் ப்ரவேஶித்து முக்தி பெறுகிறார்கள் என்று அங்கே கூறப்பட்டது; அப்பெருமானுக்கு ஒரு சூர்ணகியும் பாடப்பட்டது.

"ஶ்ரீமத்ஸுதாஸாகரோதார ஸார வ்யூஹாக்ஷுண்ணமுக்த ஸந்தானவைகுண்டஹஸ்த ஸத்யலோகஸ்த ஸம்ஸார ஶோஷ க்ஷீணம் தேஹிபோதயோதயம் தேவ தமஹம் நம:"

என்பது அந்த சூர்ணகியின் முடிவு. அங்கே 'வைகுண்ட' என்று பகவந் நாமமாக ப்ரயோகித்ததை, இந்த ச்லோகத்தில் 'வைகுண்டஸ்யாஸந்யா ஸஹஜாம்' என்பதால் ஸ்வாமி நினைப்பூட்டுகிறார். இந்த ச்லோகம் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரத்தில் ஸ்தாநவிஶேஷாதிகாரத்தின் முடிவில் உள்ளது. அதிகாரத்தின் முதல் ச்லோகத்தில் 'வைகுண்டஸ்து' என்று பாடப்பட்டது. ஸங்கல்ப ஸூர்யோதயம் அந்த அரம க்ரந்தத்துக்கு முன்பு ஸாதிக்கப்பட்டதாகச் சொல்லலாம். ஸ்ரீ க்ருஷ்ணமிச்ரர் நாலாம் அங்கத்தின் முடிவில்,

"ஸாயுஜ்ய தேவாலோகம் நிவாஸோ ஹிதோ தேஶ: ।
தத்ரைவ ஸ்கந்தாவாரம் நிவேஶயாம: "

என்று, விவேகர் இந்த க்ஷேத்ரத்தை வாஸத்துக்கு நல்ல ஸ்தாநமென்று எண்ணி, அங்கேயே தன் படையை யுத்த ஸந்நாஹத்துடன் நிவேஶநம் செய்யலாமென்று நிச்சயித்ததாக அமைத்திருக்கிறார். அவரே இரண்டாம் அங்கத்தின் ஆரம்பத்தில்,

"இதாநீம் வஶீக்ருதஹமயிஷ்டா ஜயா வாராணஸீ"

என்று, டம்பன் முதலிய மஹா மோஹப் படைகள் காசீ க்ஷேத்ரத்தை அநேகமாய் வசப்படுத்தியாயின வென்று பெருமை பேசுவதைக் காட்டியிருக்கிறார். அதை அநுஸரித்தும், தாம் நேரில் அநுபவித்ததைக் கொண்டும், ஸ்வாமி இந்த ச்லோகத்திற்கு முன் வாக்யத்தில், "விரோதிகளால் ஆக்ராந்தமாகி, ஆசாரங்கள் குலைந்து, மூன்று நாலு ஸாதுக்களே மிகுந்து

காணப்படும் இந்த வாராணஸி, பகவானோடு வேறிலாக் கலவியான ஸமாதியை ஏறுவதற்கு ஸோபானமான தாரணா த்யாநாதிகள் ஸித்திக்கத்தக்க ஸ்தானமாக மனம் எண்ணவில்லை" என்று ஸாதிக்கிறார்.

"அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீ ஹ்யவந்திகா।
புரீத்வாரவதீ சைவ ஸப்தைதா மோக்ஷதாயகா:॥"

என்று மஹர்ஷிகள், முக்தி தரும் நகரங்கள் ஏழென்று அறுதியிட்டது. உண்மையே. 'முற்காலத்தில் பாகவதர்கள் மிகவும் ஆதரித்து வஸித்து வந்ததை யிட்டு, அந்நகரங்கள் அப்படிப் புண்ய க்ஷேத்ர ப்ரஸித்தி பெற்றன; அந்த ப்ராசீந ப்ரஸித்தியால் இன்னமும் மஹிமப் ப்ரஸித்தி' என்பது ஸார ப்ரகாசிகை. பாகவதாபிமாநம் விலகி, அவர்கள் வாஸமும் இல்லாமற் போய், துராசார பூயிஷ்டமாகி விட்டால், அந்த க்ஷேத்ரங்களைப் பகவ தநுபவத்துக்கு வ்ருத்தி ஹேதுவான வாஸஸ்தாநமாக வரிக்க முடியுமோ? காசீ என்ற ப்ரஸித்தமான பெயராலும், 'விஹ்ராஜதேயக' என்றபடியில் பேருக்கேற்ற 'காசதே' என்கிற விசேஷம் ப்ரகாச குணத்தாலும் மட்டும் காசி விளங்குமோ? விளங்காது. வைகுண்டரான பகவானுடைய கதாம்ருதத்தைப் பாநம் செய்து தரிக்கும் பரமைகாந்திகள் உகக்காமல்போனால் அந்தக் காசியும் ப்ரகாசிக்காது. 'தவகதாம்ருதம் தப்தஜீவநம்' என்கிற கோபிகா கீத ச்லோகத்தை ஸாரஸ்வாதிநீ உதாஹரித்தது. கோபிகைகள் கூட்டங் கூட்டமாய்ப் பாடுவதுபோல், குழாங்கள் குழாங்களாய்ப் பாகவதர்கள் கூடிப் பகவத் கதாம்ருத பாநத்தால் காலக்ஷேபம் செய்யுமிடமே மிகச் சிறந்தது. 'யஸ்ய கஸ்யாபி மோக்ஷ:' என்று இந்த அதிகாரத் தொடக்கத்தில் ஸாதித்தபடி, ஒரே காந்தியிருந்தாலும் போது மென்னலாம். 'வைகுண்டரான பகவானுடைய கதா கீர்த்தநாதி ரஸத்தில் மக்நரான பாகவதர் வஸிக்கும் இடம் வைகுண்டம் போன்றதே. 'வைகுண்ட கல்பம்' என்று அந்த முதல் ச்லோகத்தில் அருளப்பட்டது. வைகுண்ட கதாரஸம் அநுபவிக்கப்படும் இடம், வைகுண்டம் போன்றதே யாகும். 'ஸம்ஸர்ஜயதி யதி ப்ரஸாதஜ நுஷ்டீப: ஸம்ஸார ஸஹ ஸ்ரவந்துவந்த்வ' என்று ஸாதித்ததில், ஸ்ரீ வரதராஜர் ப்ரஸாதமும், வரதராஜ ஸாமீப்யமும், வரதராஜனிடம் அந்வயிக்கும் அசலத்தைப் போன்ற அசலமான பக்தியும், ஆக இத்தனையோடும் கூட அவர் அடியாருடைய சேர்த்தியும் கூடியிருந்தால்தான் காஞ்சீ வைகுண்டமாகு மென்று குறிக்கப்பட்டது.

"யா வைகுண்டகதாரஸம்ருஜாம் சேதஸோ நோசேத ஸாயோஜ்யா, ஸாகுவந்தீ"

என்று அந்வயம் காட்டப்பட்டுள்ளது. இந்தப் புரங்களின் திருநாமங்கள் யோக ரூடம். பேர் மட்டுமல்ல; பேருக்குள்ள யோகப் பொருளாகிய மஹிமையும் குறிக்கப்படுகிறது.

'காபீ' என்பதற்கு, 'மிக ப்ரகாசச் சுடருடையது என்பது பொருள். இது 'ஆகபீதி' என்பதால் காட்டப்படுகிறது. பரமைகாந்திகளின் தேஜஸ்ஸாகிய சுடரின் ஸம்பந்தத்தால் உண்டாகும் ப்ரகாசமே ப்ரகாசமாகும். அதில்லையேல், காசீ யென்னும் ப்ரஸித்தப் பெயரும் வேறு பெயராகும்.

'ஸாகேதா' என்பது அதி ப்ரஸித்தமான பரமபதத்தைச் சொல்லும். 'தத் விஷ்ணோ: பரமம் பதம்' என்று 'தத்' என்னும் ஸர்வ நாம சப்தத்தால் அதற்கு ப்ரஸித்தி. அந்த அயோத்யை நித்ய முக்தர்கள் சூழ்ந்திருந்து பல்லாண்டேத்துமிடம். அந்தப் பரமபத அயோத்யை யல்ல வென்று விலக்குவதற்காக 'ஹேஷி ஸா ஸாகேதா' என்று கூறுகிறார். அயோத்யை என்பதற்கு, 'இந்த்ரியங்களும் மநஸ்ஸுமான உன் சத்ருக்களால் கலக்க வொண்ணாத இந்த்ரிய ஜயத்தைத் தரும் க்ஷேத்ரம்' என்பது பொருள். 'அவந்தி' யென்பது, கல்மஷங்களிலிருந்து க்ஷேத்ர வாஸிகளை அவநம் (ரக்ஷணம்) செய்யும் ப்ரபாவமுள்ள இடம். 'காஞ்சீ'—பூமி தேவிக்குக் காஞ்சீ என்னும் ஆபரணம் போன்றது 'க' என்னும் ப்ரம்ஹாவினால் பூஜிக்கப்பட்ட பகவானை யுடையது.

'மதுரா' என்பது மாதுர்யத்தைச் சொல்லு மென்று ஸ்ரீ வல்லபாசார்யர் கூறுகிறார். 'மதுராதிபதேரகிலம் மதுரம்' என்பது அவர் பாடல். மதுரை என்னும் புரீ, உத்தமம் என்கிற துரத்தை (முதன்மைச் சிறப்பை) வஹிப்பதில்லை யென்று இங்கே பாடுவதில், 'மல்லை மூதூர் வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே, சொல்லி யுய்யப் போகலல்லால் மற்றொன்றில்லை சுருக்கே' என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை ஸ்மரிப்பதாகக் கொள்ளலாம். 'ஸம்ருத்தியை யுடைத்தாய், அவனுக்கு என்று மொக்க ஸித்தாச்ரமமாய், ஸ்ரீ வாமநன் எழுந்தருளி யிருந்தும், ஸ்ரீ சத்ருக்நாழ்வான் படைவீடு செய்தும், க்ருஷ்ணன் வந்தவதரித்தும், இப்படிப் பகவத் ஸம்பந்தம் மாறாதே போருகிற தேசமாய்த்து' என்று அங்கே ஈடு. 'ஜாதஸ்வாதுஸ் ஸ்ருஷ்டஜந்மா வடமதுரை வதாமுங்க்ஷு தாயாம்' என்பது தாத்பர்ய ரத்நாவளி. அதில் அப்பாசுரத்தின் ஸங்க்ரத்தில், 'உத்தர மதுரை' என்பது 'வடமதுரை' என்பதையும், 'ச்ரேஷ்டமான மதுரை' என்பதையும் சொல்லுமென்று ஸூசிக்கப்பட்டது. உத்தரம் மட்டுமல்ல; உத்தம மாகு மென்று இங்கே ரஸம். அந்தத் திருவாய்மொழியில் 6 முதல் 10 வரையிலுள்ள எல்லாப் பாசுரங்களிலும் வடமதுரைப் பிறப்பே புகழப்பட்டது. 'புரீ' என்பதனால் ஏழு முக்திப் புரங்களைப் படித்த ச்லோகத்தை நினைக்கிறார்.

எங்கும் மஹா மோஹன் ஆளுகையே செல்கிறது. விடர், விதூஷகர், பாடகர், வேசிகள், தோழர், இவர்களால் பூமி கெட்டிருக்கிறது. எந்த இடத்தில் பரம பதத்தையே சிந்திப்பவன் ஒரு க்ஷணமேனும் வஸிக்க யோக்யம்?

—

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

திவ்ய ஹவிஸ்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A., L.T., வித்வான், திருவையாறு]

ஆடிமாதம். ஆண்டாளின் திருவிழாவிற்காகவே வில்லிப் புதுவை நகரில் தாமதித்தேன். மூன்றும் திருவிழா. யாத்ரிகர்கள் இங்கு மங்கும் கூட்டங் கூட்டமாகப் பேசிக்கொண்டு பேராரவாரத்துடன் செல்கிறார்கள். பகல் போல் விளக்குகள் ப்ரகாசித்து நிற்கின்றன. திருமுக்குளக் கரையில் நின்றேன். என் களைப்பு எல்லையற்ற தாயிற்று. இருமினேன். தலை சுழன்றது. ஓர் ஓரமாகச் சென்று உட்கார்ந்தேன். மறுபடியும் இருமினேன். ரோட்டின் பக்கத்தில் சிறு கைப்பிடிச் சுவரில் சாய்ந்தேன். குளக்கரையிலும் சாலையின் ஓரங்களிலும் காஸ் லைட்டுகள் ஜ்வலித்துக்கொண் டிருந்தன. கூட்டங் கூட்டமாக அயல் கிராமங்களிலிருந்து திருவிழாவையும் திருமாமகளையுங் காண ஜனங்கள் விரைந்துகொண் டிருந்தனர். மறுபடியும் இருமல் வந்தது. கையைத் தரையில் ஊன்றிக்கொண்டு இருமினேன். குடலைச் சுருட்டி இழுத்தது. தலை சுழன்றது. ரத்தம்போல் வாந்தி எடுத்தது. மயக்க மாயிற்று. கண்ணை விழித்தேன். யாரோ என்னைத் தாங்கி உட்கார்ந்திருந்தார். பார்த்தேன். என் வாழ்விற்கு ஒளிதந்த உத்தமனே. "இங்கே எங்கு வந்தாய்? கல்யாணி! முரட்டுத்தனம் செய்வதென்றே வ்ரதமா? துர்ப்பாக்யமான குழந்தாய்! ஐயோ! இப்படி அநாதையாகத் தரைமீது கிடக்கிறாயே!" என்றார். 'அநாதை! அநாதை! நான் அநாதை யில்லாமல் வேறு யார்? மனித வர்க்கத்தால் வெறுக்கப்பட்டு, மாதவன் ஒருவனாலும், அவன் போன்ற மற்றொருவராலும் அருள்செய்யப்பட்ட அரும்பாவி யல்லவா நான்!' என்று சொல்லிக் கைகுவித்தேன். "ஸ்வாமி! நான் சண்டாளி: பாபிநி; என்னைத் தொடவேண்டாம்" என்றேன். பக்கத்தில் வந்துகொண்டிருந்த வண்டியை ஸ்வாமி கைதட்டிக் கூவினார். 'வண்டியில் ஏறு' என்றார். சிறு குழந்தைபோல் வாய்பேசாது ஏறினேன். அவர், தாமும் உட்கார்ந்தவண்ணம் 'வடக்கு ரத வீதிக்கு ஓட்டு' என்றார். 'ஸரிதான்; மஹோத்ஸவம் என்றால் அடியவர்களுக்கு அன்ன மளிக்கும் தொண்டை மேற்கொண்டு வரும் மஹாநுபாவ னல்லவா? அக்காரணத்தால் இங்கே வந்திருக்கிறார்' என்று ஸமாதானம் செய்துகொண்டேன். குறிப்பிட்ட வீதியில் ஒரு வீட்டில் வண்டி நின்றது. எனக்கு மறுபடியும் களைப்பு மேலிட்டது. சிறிது மயக்கம் வந்தது. கண் விழித்துப் பார்த்தேன். டாக்டரும் ஸ்வாமியும் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தனர். வயதான ஒரு கிழவி தன் கையில் பாத்ரத்தில் ஜலம் வைத்துக் கொண்டு நின்றாள். பெட்ரமாக்ஸ் லைட் ஒன்று வெகு ப்ரகாசமாய் எரிந்து கொண்டிருந்தது.

ஸ்வாமி கவலையுடன், 'டாக்டர்! உள்ளபடியே சொல்லுங்கள்' என்றார்.

டாக்டர்— 'குடல் கெட்டு நலிந்திருக்கிறது. கொடிய இருமல்; ச்வாஸா சயத்தில் அழுகல் ஆரம்பித்து விட்டது. ஜ்வரமும் இருக்கிறது. நீண்ட அநாதரவால் உடல் நலம் குலைந்துவிட்டது' என்றார்.

பிறகு டாக்டரும் அவரும் அப்பால் சென்றனர். ஸுகமான படுக்கையை – பனி போன்ற படுக்கையை – எப்பொழுது நான் பார்த்திருக்கிறேன்? என் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருந்தது. ஸ்வாமியின் கருணையை எப்படி எப்படி எடுத்துரைப்பேன்? ஸ்வாமி இரவெல்லாம் விழித்து மணிக்கணக்காக மருந்து கலந்து கொடுத்தார். பாதி இரவில் ஒரு நாள் நான் கை குவித்து, "இந்தப் புழுவை ராஜகுமாரி என்று நினைக்கிறீர்களா? நான் கும்பகோணத்தில் ஒரு தனவான் வீட்டில் தங்கச்சங்கிலி திருடினேனென்பதை அறியீர்களோ?" என்றேன். அவர் திடுக்கிட்டு என்னிடம் அருவருப்படைவர் என்று நினைத்தேன். அக்கருணாநிதி கலங்காமல் 'ஸர்க்கில் இன்ஸ்பெக்டரிடம் உன்னைப்பற்றி விவரம் அறிவிக்குமாறு சொல்லியிருந்தேன். நீ இருக்குமிடங்களைத் தேடித் தேடி விஷயம் தெரிவிக்க ஆட்களை வைத்தேன். கடைசியில் கும்பகோணத்தில் சங்கிலி திருடியது சின்னு என்னும் சமையற்காரனும். சுக்காம்பாளையத் தெருவில் காத்தி என்னும் ஒருத்தியினிடம் அதைக் கொடுத்திருந்தானும். எல்லாம் வெளியாயிற்று' என்றார்.

நான் பரபரப்புடன் "ஸ்வாமி! இந்த மஹா பாபியின்பால் தங்களுக்கு எப்படி இவ்வளவு அருள் வந்தது?" என்றேன்.

ஸ்வாமி புன்சிரிப்புடன், "எங்குத் துக்கமோ, எங்கு அநாதரவோ, எங்கு அக்ரமத்தினால் வரும் ஏக்கமோ, அங்கே என் தொண்டு ஆரம்பிக்கும். உலகம் உனக்குப் பெரும்பிழை செய்தது. புருஷோத்தமன் அதை ஸஹியான். உன் வாழ்க்கையைச் சீர்செய்யவேண்டிய கடமை எனக்கில்லாவிட்டால் நான் என் தெய்வத்தின் பேரைச் சொல்லவேண்டும்? துக்கிகளையும் அகதிகளையும் தேற்றாதவன் ஸ்ரீ வைஷ்ணவனாகான். வாஸுதேவன் எனக்கு உடல் பொருள் உணர்ச்சியுள்ள ஆவி, மூன்றையும் கருணையுடன் அளித்திருக்கிறான். உன் அனையவருக்குச் செய்யும் ஸேவையே புருஷோத்தமனுக்குச் செய்யும் ஸேவை. இதுவே என் வாழ்வின் குறிக்கோள். இதை வாஸுதேவன் நடத்தி வருகிறான். அம்மா, கல்யாணி ......!" எனும்பொழுது நான் புரண்டு தலையணையில் தலைகவிழ்த்து அழுதேன். ஸ்வாமி, 'இது ஆகாது. உடம்பை அதிர்ச்சிசெய்து கொள்ளாதே' என்றார். இருமல் ஆரம்பித்தது. மயக்கமும் வந்தது.

எனக்கு உடம்பெல்லாம் அம்மைக் கொப்புளங்கள் காணப்பட்டன. டாக்டர் என்னை வேறோர் தனியிடத்திற்கு அப்புறப்படுத்துமாறு ஸ்வாமியிடம் சொன்னார். வேலைக்காரிகள் யாராவது இருவர் இருந்தால் போதும் என்றார்.

ஸ்வாமி – நான் இவளை இங்கேயே வைத்துக்கொள்ளப் போகிறேன்.

டாக்டர் – தங்கள் கதி யாதாகும்? தங்களுக்கு அம்மை கண்டால் திருவிழாவும் அன்னதானமும் யாதாகும்?

ஸ்வாமி – இந்தப் பெண்ணுக்கு எப்படி அம்மை வந்தது? அதுபோல் எனக்கு ஏன் வரக்கூடாது? எனக்கு அம்மை கண்டால் என் காரியங்களைத் தங்களைப் போன்றவர்கள் நடத்துகிறார்கள். எது நின்றுவிடும்?

டாக்டர் – ஆனால் நோயாளி அப்பால் இருக்கவேண்டியது இல்லையா?

ஸ்வாமி – கூடாது; அவள் என் பெண்.

டாக்டர் பேசவில்லை. "அவள் என் பெண்! ஐயோ! இந்த வாழ்வில் இவ்வளவு மதுரமாக என்னுடன் பேசும் தயாபரன் இவரையன்றி யார்?

ஐந்தாம் திருவிழா. திருத்தண்காலிலிருந்து தேவதேவன், ஸ்ரீ ஆண்டாள் திருவிழாவிற் கலந்து கொள்வதற்காக, அந்த ஊரிலிருந்து புறப்பட்டு விரைந்து எழுந்தருளுகிறார். தேவாலயப் பந்தலுக்கு யாவரும் விரைகின்றனர். ஒரு பெஞ்சியில் என் படுக்கையின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார் ஸ்வாமி. நான் உடலெல்லாம் நொந்து கிடந்தேன். வாய் திறவாமல் என் வேதனையை ஸஹித்தேன். மெதுவாக, 'தண்கால் தயாபரன் இன்று வில்லிபுத்தூர் விரைகின்றானே; தேவரீர் சென்று ஸேவிக்க வேண்டாமா?' என்றேன்.

ஸ்வாமி கவலையோடு கூடிய முகத்துடன், 'நான் இங்கேஇருப்பதும் அவனுக்கு உகப்பே' என்றார். நான் இருமினேன். ரத்தம் கடகடவென்று விழுந்தது. ஸ்வாமி எழுந்திருப்பதற்குள், அந்தக் கிழவியைக் கூப்பிட வேண்டுமென்று 'பாட்டி' என்று கூவினேன். மயக்கமானேன். பாட்டி எனக்கு அம்மை கண்டவுடன் நழுவினாள். வேறு இருவர் நல்ல சப்பளத்தில் அமர்த்தப் பட்டனர். ஸாயங்காலம் ஸ்வாமி புஷ்ப மாலையை என் கையில் கொடுத்தார். ஸ்ரீ ஆண்டாள் சூடிக் களைந்து அச்சுதன் அணிந்த மாலை; ஆழ்வார்கள் ஆசைப் பட்ட மாலை. "தாராரும் வனமாலை தாரானோ என்றென்றே தளரும் சோரும்" என்று மெதுவாகப் பாடினேன். 'அங்கே- வானத்தில்—வைகுந்தத்தில்—என் வள்ளலை என்று காண்பேனோ? கண்ணா! கண்ணா!' என்று வாய் விட்டுக் கூச்சலிட்டேன். எனக்கு ஏதோ உணர்ச்சி ஏற்பட்டது. எழுந்து ஸ்வாமியின் காலடியில் விழுந்தேன். ஸ்வாமி பரபரப்புடன் 'ஐயோ! என்ன செய்தாய்? நீ எழுந்திருக்கலாமா?' என்று சொல்லி என்னை மறுபடியும் படுக்கையிற் கிடத்தினார். தாய் குழந்தையை எடுப்பது போல் வெகு அன்புடன் என்னை எடுத்தார். எடுத்த போதிலும் என் கொப்புளங்கள் எனக்குத் தந்த வேதனை சொல்லத் தரமன்று. இருமிய வண்ணம் "ஸ்வாமி! கண்ணன் இருக்குமிடம்—அதோ—நீலவானில் - மேகம், சந்திரன், ஸூர்யன், தாரைகள் முதலிய பதங்களைக் கடந்து, பாவியர் நெஞ்சிலும் நினைக்க வொண்ணாத ஒளி உலகமல்லவா? அங்கே பசியில்லையென்றீர்கள்; தாகம் இல்லையென்றீர்கள்; ஆபத் பாந்தவனான ஸ்ரீ வாஸுதேவனின் தொண்டின் பேரின்பத்தில் மூழ்கலாம் என்றீர்கள். என்று— என்று............பிறகு மெதுவாய்— கேட்க விகாரமான குரலில், "பிறையேறு சடையானும்

பிரமனும் இந்திரனும்........." என்று பாட முயன்றேன். இரவு சாளரத்தின் வழியாக, வில்லிபுத்தூரின் மாட மாளிகைகளும் மலைத் தொடர்களும் காணப்பட்டன. வெளியே திருவிழாவின் திவ்ய கோஷம். யானைகள் இங்கு மங்கும் அலையும் மணிச் சத்தம். அடியவர்களின் பேராரவாரம். 'கருடன் மீதேறி வருவான் கண்ணன். அடியவர் களிக்க வருவான் கண்ணன். என்னை நினைப்பானோ? எனக் கருள்வானோ?' என்று ஏங்கினேன். வானில் அப்பொழுது இடி ராஜாதி ராஜனின் முற்றத்தில் ஒலிக்கும் முரசு போல், மந்திரமாக முழங்கி 'நானுளேன் அஞ்சாதே' என்று என் கண்ணன் மேக படலங்களுக் கிடையில் நின்றும் பதிலளித்தது போல் இருந்தது. 'ஊமூ—அ:' என்று சொல்வதே விரதமாகக் கொண்டவனல்லவா! ஸ்வாமி திகைத்து உட்கார்ந்து, என்னையே தன் அருள் பொழியும் கண்களால் நோக்கினார். அவர் வாய் ஏதோ துதி மொழிகளால் அசைந்து கொண்டிருந்தது. 'வத்ஸே!' என்றார். திரும்பினேன். 'வாஸுதேவன் பரமதயாளு! உனக்கென்ன வேண்டும்?' என்றார். நான் கைகுவித்து 'ஸ்வாமி! காரார் வயல்சூழ் கணமங்கையின் பாசுரம் என் காதில் விழாலாமோ?' என்றேன். இனிய குரலில் ஸ்வாமி 'பெரும்புறக் கடலை' என்று ஆரம்பித்தார். மெய்ம் மறந்து கேட்டேன்- "பெரும்புறக் கடலையடலேற்றினைப் பெண்ணை ஆணை எண்ணில் முனிவர்க் கருள்தரும் தவத்தை முத்தின் திரள் கோவையைப் பத்தராவியை நித்திலத் தொத்தினை" எனும் பொழுது என் உடல் பரவசமாயிற்று. என்னை வாள்கொண்டு வெட்டுவது போன்ற வேதனையையும் மறந்தேன். 'என்ன அன்பு! என்ன சொற்கள்! ஆழ்வார் திருவடிகளே சரணம்; அப்புறம்......' ஸ்வாமி ஆரம்பித்தார். ஐயோ! என்ன அழகிய சொல்லடுக்கு! ஆழ்வாருக்குப் பேசிப்பேசி ஆரவில்லைபோலும்! அரும்பினை அலரை அடியேன் மனத்தாசையை அமுதம் பொதியின் சுவைக் கரும்பினைக் கனியைச் சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே. ஆஹா! நான் எங்கே காண்பேன்! எங்கே காண்பேன்! ஸ்வாமி! ஸ்ரீ காந்தனைக் காணவேண்டாமா?" என்றேன். இருமினேன். ஸ்வாமி 'பேசாமற் படுத்திரு அம்மா' என்றார்.

நான், "என் ஸர்வ பந்துவே! இன்னும் சற்று நேரத்தில் என் பேச்சு அடங்கும்; என் மூச்சு அடங்கும். அப்பொழுது தேவரீர் திருவடி த்யான மூலமாக, மாதவனை நான் அடையுமாறு அவன் இரங்கவேண்டும். அப்பா—அதோ என்ன ம்ருதங்க வாத்யம்—ஆண்டாள்! என் துயரைப் பெண்ணாய்ப் பிறந்த நீ அறிவாய்!" பிறகு உடைந்த குரலில் ஆரம்பித்தேன்.

"பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில் பொருள் இன்பமென இரண்டும்
இறுத்தேன்"—என் குரல் பாட மறுத்தது.

'இருமல்! இருமல்! ஐயோ பாவம்! துர்ப்பாக்கிய ஜீவனே!' என்று சொல்லிக் கொண்டேன். மனத்திற்குள் 'திருவிண்ணகர் மேயவனே' என்றேன்.

என்னை அவனுக்குக் கொடுக்க முயன்றேன். நான் அவனைச் சேரவேண்டிய ஹவிஸ் அல்லவா?

தலை சுழன்றது. ஸ்வாமி தலையைத் தம் கையால் தடவினார். 'வத்ஸே! வத்ஸே' என்றார். அவர் உரக்கவே த்வயத்தை அநுஸந்திக்க ஆரம்பித்தார். மூச்சுவிட முடியவில்லை. தலை சுழன்றது. கண் இருண்டது............ ஒளி மயமான மண்டலம் காணப்பட்டது.

எழுத்தாளன் கூற்று.

விழுந்து விழுந்து வேண்டி நின்ற ஸ்வாமி கண்ணீருடன் திரும்பினார். வாய் துடித்தது. "ஆஹா என்ன வாழ்க்கை, என்ன வாழ்க்கை! பிறரால் இகழப்பட்டு, அவ்விகழ்ச்சியை அச்சுதனின் அன்பில் மறந்து, அவனையே வேண்டி ஆராத காதல் கொண்டு அலைந்த ஆச்சரியமான ஜீவனே! நீ வாழ்வாயாக" என்றார். தேவாலயத்திலிருந்து முரசொலியும் வாத்ய கோஷமும் ராஜாதி ராஜன் புறப்படும்பொழுது எழுவனபோல் எழுந்தன. ஏதோ ஒரு ஜீவனை ஸ்வீகரித்த களிப்புத் திரு முகத்தில் விளங்க நின்றான் கோதாநாதன். வானில் மந்தமான இடி முழக்கம். சிறு மழைத் தூற்றல். கல்யாணி 'பத்தராவியை பால் மதியை அணித் தொத்தை' விண்ணகரில் காண அவ்வியனுலகு சென்றாள் போலும்! அவள் திவ்ய ஹவிஸ்ஸானாள்.

[முற்றிற்று.]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

வ்யய ௵ பங்குனி ௴

1௳	வெள்ளிக்கிழமை	...	சூந்ய திதி; மீநரவி 19.57
2௳	சனிக்கிழமை	...	அதிதி
3௳	ஞாயிற்றுக்கிழமை	...	மீந க்ருஷ்ண நவமி திதி
5௳	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
6௳	புதன்கிழமை	...	முநித்ரய ச்ரவண த்வாதசி
9௳	சனிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
10௳	ஞாயிற்றுக்கிழமை	...	யுகாதி பண்டிகை
14௳	வியாழக்கிழமை	...	மீந சுக்ல பஞ்சமி திதி
15௳	வெள்ளிக்கிழமை	...	மீந சுக்ல ஷஷ்டி-ஸப்தமி திதி த்வயம்
16௳	சனிக்கிழமை	...	அஷ்டமி திதி.
*18௳	திங்கட்கிழமை	...	ஸ்ரீராம நவமி
19௳	செவ்வாய்க்கிழமை	...	ஏகாதசி வ்ரதம்
22௳	வெள்ளிக்கிழமை	...	பங்குனி உத்திரம்
30௳	சனிக்கிழமை	...	மீந க்ருஷ்ண ஸப்தமி திதி
31௳	ஞாயிற்றுக்கிழமை	...	மீந க்ருஷ்ண அஷ்டமி திதி; மேஷரவி 40. 19 [மேஷ ஸங்க்ரமண தர்ப்பணம்]

* குறிப்பு:—17-ம௳ ஞாயிற்றுக்கிழமை 6-நாழிகைக்கு மேற்பட்டு அஷ்டமி வேதை இருக்கிறபடியால், அன்று ஸ்ரீராம நவமி உத்ஸவமில்லை, மறுநாள் (அதாவது: 18௳ திங்கட்கிழமை) தான்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே வீரராகவ வரப்ரஹ்மணே நம:

எம்பெருமானர் ஸ்ரீ ஸூக்தியில் ஸ்ரீ தேசிகனுக்குள்ள ஈடுபாடு

[ஸ்ரீ. உப. கருடபுரம் தி. ஈ. வரததேசிகாசார்யஸ்வாமி திருவெவ்வுளூர்.]

நமஸ்தேஸ்து ஹஸ்திஸைலேஶ ஸ்ரீமந் அம்புஜலோசந ।
ஸரணம் த்வாம் ப்ரபந்நோஸ்மி ப்ரணதார்த்திஹர ப்ரபோ ॥
கிம் தேஹவத்தநாயீபோ தேவோ ஓதத்ராஜ்ஞா ஹாமி ந: ।
யத்த்வத்கஸ் ஷக ஶாகொபிகளுோம் நாஹஹதி அருஶா: ॥

“ ப்ராணாயம் லக்ஷணதுநி: ப்ரதிஹரணாத ஶாஸகம்ழ ।
ப்ரஸாயயதி யஸ்ஸூக்தி: ஸ்வாயீநவதிகாம் ஶ்ருதிழ ॥ ”

ப்ராக்ருத மண்டலத்தில் கர்ம பத்தர்களான நமக்கு நித்ய முக்தர்களுக்குப் போலே பகவானுடைய ஸ்வரூப ஸ்வபாவ யாதார்த்யம் ப்ரத்யக்ஷ வேத்யம் ஆகாதபோது, வேதங்களே முதற் கண்களா யிருக்கின்றன வென்பது சாஸ்த்ர ஸித்தமான விஷயம். இவ்விஷயத்தை “ அக்ஷிக்ஷத்தாத ஶாஸ்த்ரேண ஸூக்ஷ்மகாயத்தாயத உபபத்தநா ” என்று காளிதாஸனும் கூறிப் போந்தான். ப்ரதாந இந்த்ரியங்களான பகவானை யதாவத்தாகக் காட்டுகிற ‘ கவத்ராஸம் வர்ணாரீகம் ’ முதலான வேதங்களாகிற கண்கள், குத்ருஷ்டிகளாகிற கண்குத்திப் பாம்புகளால் குத்தப்பட்டுக் கலுஷிதங்களாய்ப் பகவானை உண்மையாகக் காண்பிக்கச் சக்தியற்றவைகளாகப் போனவளவில், அக்கண்களை எம்பெருமானர் ‘ஶம்ஹீராம்ஹஸ்ஸமஹ்ஸூத’ முதலான ஸ்ரீ ஸூக்திகளாகிற பிக்ஷுக் வஸ்ரகளாயும் ஸைந்த்ரிகைகளாயும் அலங்காரம் செய்கிறவர்களாயுமுள்ள ஸ்த்ரீகள், கெட்ட அர்த்தங்களாகிற காலுஷ்யங்களை நன்ருய் எடுத்து, ஸத்தர்க்கங்களாகிற அஞ்ஜநங்களால் அலங்கரித்து, ஸ்ரீ புண்டரீகாக்ஷனை யாதாவத்தாகக் காண்பிக்கும்படி செய்கின்றன வென்று “ ப்ரஸாயயதி யஸ்ஸூக்தி: ” என்பதால் அருளிச் செய்கிருர். ‘ ஸூக்தி: ’ என்பது, ஜாத்யேக வசநம். இப்பக்ஷத்தில், ஜ்யோதிஷ்பதி சப்தவாச்யனுன ச்ரிய:பதி, தைஜஸேந்த்ரியங்களான வேதக் கண்களை அதிஷ்டாநம் செய்கிருன் என்பதை ‘ஸ்வாயீநவதிகாழ’ என்பதால் ஸபஷ்டக்குகிருர். யஜமாநன் ஸ்வாதீநமாக இருப்பதால் அவனைக் காண்பிப்பதற்கு ஸ்வாதந்த்ர்யம் ஏற்பட்டது. இப்படிச் செவ்வைப் படுத்திக் கண் கொடுத்து மஹோபகாரம் செய்தருளின எம்பெருமானர் திறத்தில் நாம் செய்ய அடுப்பது என்னவென்ருல்: ‘ ஶாஷ ஸவத்வஸஹ தொ ஶ வரிஷ்ம்ஶொ ஹநமேத: ” என்பதுபோல் ஒரு ப்ரணமம்

தான். இதைக் கிஞ்சித்காரமாகத் திருவுள்ளம் பற்றவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறார் ‘ ப்ரதிக்ருஹாண தத்ஸகலம் ’ என்று. இந்த கிஞ்சித்காரம் ப்ரதி ப்ரயோஜநமாக அமையுமோ வென்னில்: அதுவும் அமையாது. தாம் கிஞ்சித்காரம் பண்ணுமற் போனல் தமக்கு ஆத்மா நிற்காது. அதற்காகவாவது தம்முடைய ப்ரணமத்தையும் தம்முடைய அநுக்ரஹார்த்தம் ப்ரதி ப்ரயோஜநமாகத் திருவுள்ளம் பற்றவேண்டுமென்று

“ஸ்நாநாநி வாஸாம்ஸி வஸ்த்ராண்யாபரணாநி ச ।
ப்ரதிக்ருஹ்ணீஷ்வ தத்ஸர்வம் மதநுக்ரஹகாம்யயா ॥ ”

என்று விபீஷணுழ்வான் பெருமாளை ப்ரார்த்தித்தாற்போல், எம்பெருமானுரை ‘ ந நமேயம் து கஸ்யசித் ’ என்று ‘ வணங்கமாட்டோம் ’ என்றிருந்தாலும், நாட்டுக்கு அவர் செய்த மஹோபகாராதி குணங்களைக் கண்ட தாம் தொழுதல்லது ஜீவிக்க விரகில்லை என்று தமது பக்திக்குப் போக்கு வீடாக ப்ரார்த்திக்கிறார். ‘ ப்ரதி ’ என்பதால் ‘ ப்ரதிப்ரயோஜநமாக’ என்பதும், ‘ ஸகலம் ’ என்பதால் தம்முடைய பக்த்யதிசயமும் ஸூசிதமாகிறன்றன. இந்த ப்ரணமத்திற்கு உரியவரன்றோ உடையவர்? ‘ மஹேஷ்வாஸ: கீர்த்யதே நா த்ரஸ்யதீஷ: ப்ராம்ஜலிர்ப்ரவீஷ’ என்பது போலன்றி, ‘ தாஸோ ஸீதா ’ என்பதுபோல் ப்ரணமத்தை முதலில் செய்து, கீர்த்தநத்தைப் பின்பு செய்து ஸந்தோஷிக்கிறார் ‘ ப்ரணாமம் ஸ்துதிர் ஈர்தநம் ’ என்று.

இப்படி ஸ்ரீயதிராஜ ஸப்ததியில் ஒவ்வொரு ச்லோகமும் உடையவர் ஸ்ரீஸூக்தி விஷயங்களாக இருப்பதால், ‘ஸ்ரீ ஸூக்தி ஸப்ததி’ என்றே திருநாமமிட அமையும். இப்படி ஸ்ரீ ஸூக்தியில் தமக்குள்ள ஈடுபாடே ஸ்ரீ பாஷ்யத்தில் சிரபரிசயம் பண்ணின மஹா ப்ராஜ்ஞர்க்கு நிலமாகு மென்றும், ‘ நிவிஷ்டம் யதிஸார்வபௌமவசஸாம் வ்ருத்திஷு யௌவநம் ’ என்று ப்ருதக் ஜநங்களுக்கு யௌவநம் ப்ராக்ருத ஸ்த்ரீகளுடைய யௌவநங்களால் நிவ்ருத்தமாகும்; நமக்கோ வெனில் [‘வ்ருத்தி’ என்னும் ஸ்த்ரீலிங்க ஸ்வாரஸ்யத்தாலும் பஹுவசநத்தாலும்] அநேக விலக்ஷண ராஜமஹிஷி அநுபவத்தால் நிர்வேசமாகத்தை அடைந்த தென்றும், ‘ யதிப்ரவரபாரதீரஸபரேண நீதம் வய: ’ என்று, பால்யம் முதல் வார்த்தகாந்தம் வயஸ் விலக்ஷண ஸ்த்ரீ ரஸத்தாலே கழிக்கப்பட்ட தென்றும் அருளிச் செய்தார். மேலும்:

“ கஹநே நாஹநே விஹரணவசம் ஜெபிக்கப்ர:
ஸ்வச்சே நஸ்வச்சே ஸவதி மதஸந்தேஹவிஷயா: ।
கநாயாஸா யாஸாமவிததிஸயா ஸா ஹமவதீ
ஸதாயாராயாராயர நிகரஸாயார மணர ஷதி: ॥ ”

என்பது ஸ்ரீ தேசிகனுடைய ஸூக்தி. [இதன் பொருள்:— நம்முடைய மநஸ்ஸில் ஸந்தேஹ மில்லாத ஸ்பஷ்டார்த்தங்களான ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் எப்பொழுதும் ருசியாய்ப் போக்யமாய் நடமாடுகின்றன. வேருெரு அஹங்கார மமகாரங்களுக்கு இடமில்லை. அந்த ஸ்ரீ ஸூக்திகளுக்கு, நீலமேக ச்யாமளனும் சேஷ சாயியுமான தேவனே அத்வாரகமாய் ப்ரதிபாத்யன் என்பது.]

இவ்விடத்தில் 'ஶேமுஷீமுஷ: என்னும் ஸத்ரீலிங்க பஹுவசந நிர்த்தேச ஸ்வாரஸ்யத்தால், அநேக ஸ்த்ரீகளை உத்வாஹம் செய்துகொண்டு, அவர்களிடத்தில் விலக்ஷண காமாதிரேகத்தால் ஸதா அவர்களை மநஸ்ஸில் த்யாநம் செய்ய, அவர்களும் 'நம் யஜமாநனுக்கு வேருெருத்தியிடம் அபிலாஷை யில்லை; நம்மிடமே அபிலாஷை' என்று ஸந்தேஹ மில்லாமல் விச்வாஸம் செய்து கொண்டிருக்க, 'அஹந்தா' வென்கிற வேருெரு ஸ்த்ரீக்கு மநஸ்ஸில் புகுவதற்கு இடமில்லை யென்று, அவளைக் குறித்து ஸம்போதித்து, 'உனக்கு என் மநஸ்ஸில் வாஸம் செய்ய இடமில்லை; ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளுடைய கணங்கள் நிபிடங்களாய் மற்ருெருவருக்கு இடங் கொடாமல் நித்யவாஸம் செய்கின்றன; உன்னிடத்திலும் அவர்களிடத்தில்போல் கண்ணேட்டம் இருக்கிறதென்று அவர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் ஸந்தேஹப்பட்டு விலகிவிடுவார்கள்; ஆகையால் நீ உள்ளே போகக் கூடாது; உனக்குத் தகுந்தவன் நானில்லை; உன்னை வைத்து ஆதரிக்கும் இடந்தேடிப் போவாய்' என்று ஸாதித்தார்.

இங்கு 'ஶேமுஷீமுஷ:' என்று அப்புள்ளார் உட்பட்ட ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகள் என்று பொதுவாக இருந்தாலும், பூயோ ந்யாயத்தால் எம்பெருமானுர் ஸ்ரீ ஸூக்திக ளென்கிற விசேஷித்த அர்த்தங் கொள்வது உசிதம்.

இப்படி ஸ்ரீ ஸூக்திகளில் ஈடுபட்டால், ஸ்ரீ பாஷ்யகாரரிடத்தில் உள்ள பக்த்யதிசயம் தானே விளங்கும். இதை ஸ்பஷ்டமாகவும் அருளிச்செய்கிருர். குருபரம்பரையில் பாஷ்யகாரர்தான் ப்ரதாநம். இவருக்கு சிஷ்யத்வ ஸம்பந்தமோ ஆசார்ய ஸம்பந்தமோ பொருந்தினபடியால் தான், மற்றவர்கள் குரு பரம்பரையில் ஏற்ற மடைந்தார்கள். இவருக்கோ ஸ்வத ஏவ ஏற்றம்.

“ பதத்வந்த்வம் ஸம்யமிநாம் [illegible]”

இத்யாதியாக இவருடைய திருவடி ஸம்பந்தம் பெற்ற சிஷ்யர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள்; இவருடைய திருமுடி ஸம்பந்தம் பெற்ருேர் ஆசார்யர்கள். இவருடைய திருமுடிபடும்படி ப்ரணமம் பண்ணப்பட்ட திருவடிகளையுடையவர் என்றபடி. இந்தஸ்ரீபாஷ்யகாரருடைய ஸாக்ஷாத் ஆசார்யரான பெரிய நம்பிகளைத் தனியனிட்டுத் தண்டனிடும் போது, 'யாமுநேயமதீந்த்ரஸ்ய ஶேமுஷீம் வந்தே ஶ்ரயே' என்று 'உடையவருடைய ஆசார்யரானபடியால் தண்டன் ஸமர்ப்பிக்கிறேன்' என்று ஸாதித்தார்.

“ஸ ஏஷ நாத தவ நாதிஸாயி ஹ்ருந்நாயகீ ராஜேந நிவஸந் நாயக ஸ்ரீ: |
மஹதீ ரங்கபதே: ஹாரயஷ்டி விலஸந்த்யா நாம் ஸமுதயம் பதா விபாதி ||”

என்று உடையவர், குருபரம்பரையாகிற முக்தாஹாரத்தில் குரு நாயக மணியாக நடுவில் நின்று, முன்னும் பின்னுமாக மற்றவர்களைத் தேஹளீ தீப ந்யாயத்தால் ப்ரகாசிப்பிக்கிறரென்று உகந்தார்.

“இப்படிப்பட்ட ஸ்ரீ பாஷ்யகாரரிடம், எங்களாழ்வான் கடாம்பியாச்சான் இவர்களுக்குப் போல் தமக்கு ஸாக்ஷாத் ஸம்பந்தமில்லையே; அப்படி ஸம்பந்தம் பெற்று ‘ப்ரியதாஸீதி ஸம்வத:’ ‘க்ருஷ்ணோஷ்ணாஸிக்த்வா’ என்பது போல் வாதி விஜயம் செய் என்று ஸாக்ஷாத்தாக நியமிக்க, ‘நாம் வாதி விஜயம் செய்து ஸ்வாமி திருக்கையால் ஸாக்ஷாத்தாக அநுக்ரஹிக்கப்பட்ட பஹுமாநத்தைப் பெற்று மகிழ்வதற்குப் பாக்யம் பெற்றிலேமே” என்ற குறையை, ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸ்ரீபாஷ்யகாரரை ஆசார்யனாகவும் தாம் சிஷ்யராகவும் பாத்ர ப்ரவேசம் பண்ணிவைத்து நிவ்ருத்தி செய்து கொண்டார். “க்ஷாவதாகடகஸௌவர்ண வாதிப்ரஹதம்” என்று இவர் தாம் வாதி விஜயார்ஹர் என்று நியமிக்கப்பட்டு வாதி விஜயம் செய்ய வாதி விஜயலக்ஷ்மீலக்ஷணம் ஸ்ரீ பாஷ்யகாராநுக்ரஹீதமான ஸ்வர்ண கடகத்தை இடது திருவடியில் சாத்திக் கொண்டு ப்ரீதரானார். ஸ்வாமியின் மஹிமை எல்லையற்றது. யதாமதி விஜ்ஞாபித்துக் கொண்டேன்.

“ஜயதி யதிராஜஸூக்திர் ஜயதி முகுந்தகதா ஸுதாதரங்கம் |
நிகமாந்ததேசிகேந்த்ர ஜயந்தி தத்ஸூக்தரத்நாஸ்ச ஹவி: ||”

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வென்று விளம்பும் வேதியன்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்வான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

அடுத்துவர வலுமையாக: “மையுமா கடலு மயிலுமா மழையு மணிகளுங் குவளையுங் கொண்ட மெய்யனே” என நவமணி மாலையில் அமைத்துப் பாடியதோடு நின்று விடவில்லை நம் மறைமுடித் தேசிக வண்ணல். பரிபாடலை நோக்கினர். அங்கு மணி, முந்நீர், சூன் மேகம் என்ற மூன்று மட்டும் உவமையாகக் குறிக்கப் பெற்றுள்ளன. ஆராய்ச்சி நடைபெறுகின்றது.

தனக்கு உவமை இல்லாதவன் பகவான்; அவனுக்கு ஒத்தாரும் மிக்காரும் இலர். அழகிலும் குணங்களிலும் சிறந்து மிகவும் போக்யமாகத் திகழ்கின்றான் அவ்வந்தமில் அழகன். மேலும் அப்பொழுதைக் கப்பொழுது ஆராவமுதமாய் ஸேவை ஸாதித்தருளும் அச்சுதனும் விளங்குகின்றான். அப்பரமன் "மூன்று வகையான சேதநாசேதநங்ளுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் மூன்றும் தானிட்ட வழக்காம்படி நிற்கிற ச்ரிய:பதியை ப்ரேரிதா வென்கிறது. இவன் மூன்று ஸம்பந்த நியமத்தாலே ஸர்வ சரீரியாய், மூன்று வ்யாபார விசேஷங்களாலே ஸர்வ கார்யங்களுக்கும் ஸர்வ காரணமாய், மூன்று காலத்திலும் ஏகரூப ஸ்வரூபங்களை யுடையவனாய், மூன்று ஸ்தாநத்திலே நித்யவாஸத்தை யுடையனாய், மூன்று வகையான அர்ச்சாவதாரத்தை யுடையனாய், மூன்று யுகத்திலே விசேஷித்து ப்ரகாசிக்கு மவனாய், மூன்று குண யுகத்தாலும் த்ரியுகனாய், மூன்று வ்யூஹங்களாலே மூவிரண்டு ப்ரகாரங்களைப் பண்ணுமவனாய், மூன்று புருஷார்த்தங்களுக்கும் மூலமாய், மூன்று ப்ரமாணங்களாலும் ப்ரதிஷேத மில்லாதவனாய், மூன்று மாத்திரையான ஒற்றை யெழுத்துக்கு முக்யார்த்தமாய், மூன்று ரஹஸ்யங்களில் சிக்ஷையாலே விசேஷித்து அறியப்படும்." அத்தகைய அலர்மேல்மங்கை உறை மார்பனை நாம் கிட்டி ஸேவித்து அநுபவிக்கும் ஆநந்தம் எல்லையற்றது. இதனை நம் ஆசாரிய சிகாமணி தாம் ஸேவித்து, தமது ஆநந்தாநுபவம் உள்ளடங்காமல் "தாமின் புறுவது உலகின்புறக் கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்" என்ற கணக்கிலே அத்திவ்ய மங்கள விக்ரஹத்தின் பேரழகை நம் கண்முன் எடுத்துக் காட்டும் அற்புதத்தை என் புகழ்வது ஏழை? அதிசய உபமானங்கள்; அபூர்வ உபமாநங்கள்; அழகிய உபமானங்கள்; சங்கத் தமிழையும் வென்ற உபமானங்கள், நவம் நவமான உபமானங்கள். என்ன அபூர்வ சக்தி! எவ்வித அற்புதத் திறன்! பரிசுத்தமான வேதங்களின் முடியில் வீற்றிருக்கும் புருஷோத்தமன் திருத்துழாய் மாலையைத் திருமுடியில் அணிந்து கொண்டு விளங்குகின்றான். வென்றிப் புகழ்த் திருவேங்கடநாத குருவாம் நம் ஸ்ரீ தேசிகமாமணி அவ்வேதாந்த சூடாமணியை ஸேவிக்கின்றார். அபரிமிதமான அத்திவ்ய ஸௌந்தர்யத்திலே ஈடு படுகின்றார். கடல் கடைந்து அமுதத்தைச் சேர்த்த திருமாலன்றோ இவன்? "நீண்ட, மலைகளும் மாமணியும் மலர் மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற. அலைகடல் போன்றிவர்" என்றும்; "மையார் கடலும் மணி வரையும் மாமுகிலும், கொய்யார் குவளையும் போன்று இருண்ட மெய்யானை" என்றும்; "மைவளர்க்கும் மணியுருவம் மரகதமோ மழைமுகிலோ" என்று திருமங்கையாழ்வாரும்; "கடலோ மழையோ முழு நீலக் கல்லோ காயா நறும்போதோ, படர்பூங் குவளை நாண்மலரோ நீலோற்பல மோ பானலோ" என்றும்; "மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ, வையோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்" என்றும்; "கருணையங்கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி" என்று கம்பநாட்டாழ்வானும், பகவானுக்கு ஸமுத்ர ஸாம்யத்தை ஒருவாறு அருளிச் செய்தனரே. கொண்டல்வண்ணன், முகில்வண்ணன், காயாவண்ணன், நீர்வண்ணன், மணிவண்ணன், கடல் வண்ணன், மணிமாணிக்கச் சுடர், நீலமேக ச்யாமளன், பச்சை

மாமலைபோல் மேனி, பறவாப் பூவைப் பூவினேன், அல்லியாண் டமைந்தமேனி அழகன்'' என்றெல்லாம் வருணித்துவிட்டால் போதுமா? நவம் நவமாகத் துதிக்கவேண்டாமா?

அடுத்து வாலுவமையாக: மணி, முந்நீர், மேகம் என்றுள்ளது பரி பாடலில். மணியும் மேகமும் கடலினின்று தோன்றுவன வாகலின், கடலை முன்னர்க் கூறவேண்டாமா? 'முந்நீர் வருமழை' என்றதை நோக்க, முகிலை யடுத்து வைக்கலாமே. அதன்பின் மணியை இடுவோம். உடனே அடைவை மாற்றி யமைக்கின்றார் கடல், முகில், மணி என்று. அடைவு அமைக்கும் அற்புத னல்லவா நம் ஆரிய வேந்தல்? 'திரைபா டவிந்த முந்நீர்' என்றான் பரிபாடல் ஆசிரியன். அவிதல்—குறைதல் என்பதைச் சீவக சிந்தாமணியிற் காண்கின்றோம். அது போதாது. 'திரைபா டவிந்த' என்பதை 'அலையற்ற' என மாற்றவேண்டும், 'முந்நீர்' என்பது' 'ஆர் அமுதக்கடல்' எனச் சிறப்புப் பெறவேண்டும். உடனே எம்பெருமான் திருமுகத்தை நோக்குகின்றார். அப்பன் திருமுக மண்டலத்துக் கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட பெரிய வாய கண்களைக் கண்படைத்த பயனாக ஸேவித்து, '' இவன் பரிபூர்ணமாகிய அமிருதக் கடல்; இக்கடலுக்கு அலையும் கிடையாது; அலைதலில்லாத நிறைந்த நீர்க்கடல். அவன் நீர்வண்ண னன்றோ? 'நின் தோற்றமும் அகலும் நீரினுள' [தோற்றம் வெளிப்படுதல். அகலம் பெருமை] என்று அப்பரிபாடலே கூறுகின்றதே. நாராயணன் என்னும் திருநாமம் நீரின்கட் காணப்படுதலாகிய இக்காரணம் பற்றி வந்ததுதானே. 'மாயன் உதகத் திருவுடம்பு' எனப் பிறரும் கூறவில்லையா? என்று இன்புறுகிறார். மேலே செல்கிறார். 'வருமழை யிருஞ்சூல்' என்றது பரிபாடல். ஆரமுதக் கடலினது நீரை முற்றும் குடித்த மேகம் எனல் பொருந்தும் என உன்னி, அத்தொடரை 'அக்கட லுண்ட முகில்' என அமைத்துக் கொள்கிறார். '' காரொப்பார் கருணைமழை பொழியு நீராற் கடலொப்பார் கண்டிடினுங் காணுக் கூத்தால், நீரொப்பார் நிலமளிக்குந் தன்மை தன்னால்'' எனப் பிறிதோரிடத்தும் பாடுவர் இவர். ஆனல் பார்க்கிறார். அகார வாச்யனது இனிமைக்கும் நிறத்திற்கும் இவை ஒருவாறு ஒக்கும். ''பகவானுடைய திவ்ய மங்கள விக்ரகத்தின் ['அருளாளர் தாமெனினுந் தமக் கொவ்வாரே' எனும்] உவமையற்ற காந்தி கண்களையும் மனத்தையும் அப்படியே கவர்கின்றதே. இப்பேரழகுக்கு எதனை உவமிக்கலாம்?'' என்று சிந்தனையில் ஆழ்கின்றார். 'திருமணி' என்றார் கடுவனிளவெயினனார். அலைகடல் நடுவணோர் அனந்தன் மீமிசை, மலையென விழிதுயில் வளரு மாமுகில், திரைகெழு பயோததி துயிலுந் தெய்வவான், மரகத மலை யன்றோ நம் பரமன்? விலை மதிக்க வொண்ணாத ஸகல நோய்களையும் அணுகவொட்டாமற் செய்ய வல்ல ஒரு இந்திர நீல மணி பர்வதம் என்று ஆய்ந்து, 'திருமணி' என்பதனை, 'விலை யற்ற நன்மணிவெற்பு' என்று விரித்து வைக்கின்றார். இதுகாறுந்தான் பரிபாடல் வந்தது. இவை போதா. பகவானது திருமேனி ஒளியும் அழகும் என் மனத்தின்கணுள்ள அஞ்ஞான இருளை அறவே அகற்றி அளவற்ற ஆனந்

தத்தை நல்குகின்றனவே. இப்பரம ஸௌந்தரியத்திற்கு உலகில் ஸாம்யம் இல்லையா?' என்று துருவி ஆராயப் புகுகின்றார் தூப்புல் மாபுருடன். [வெயிலானும் நிலவாலும் ஓங்கியுள்ள தினம்; வெயிலும் நிலவுஞ் சேர்ந்து பிரகாசிக்கும் பகல் வெயில் நிலவு இரண்டும் ஒரே காலத்தில் பிரகாசிக்கும் நற்பகல்; குளிர்ந்தும் தாபஹரமுமா யிருக்கிற சந்த்ரிகை; சிரேட்டமாயிருக்கின்ற பகல்] என்று பொருள் கொள்ள இடங்கரும் 'வெயில் நில வோங்கு பகல்' என்ற உவமைத் தொடர் முன்நிற்கின்றது. இவ்விதம் கூறினால் பரம புருஷனது தேஜஸ்ஸுக்கு ஒக்கும் என்று ஆனந்தமடைகிறார். 'ஆரமுதக்கடல்;' 'கடலுண்டமுகில்,' விலையற்ற நன்மணி வெற்பு,' 'வெயினில ஓங்கு பகல்' என்று தாமறை சூடும் துழாய் முடியனான பகவானை, இதற்குமுன் இல்லாததும் இனி உண்டாகாததுமான சில உபமானங்களை மனத்திற் கற்பித்துப் புகழலாம். 'வென்று விளம்பும் வேதியன்' வித்தகர் வியந்து கூறி மகிழுமாறு கவி இயற்றலாம். ஆனால் அச்செந்தாமரைக் கண்ணனை உள்ளபடி உணர்ந்து கண்குளிரச் சேவிக்கும் பாக்கியவான்களாகிய தொண்டர்களின் மஹிமையை மனத்தால் நினைக்கவும் அரிது. அவனது திருவடியைப் பற்றிய பாகவதர்களுக்குச் சமமானவை இல்லை என்பது பேருண்மை. எனவே ஈற்றடியால் இவ்வுறுதிப் பொருளை விளக்க எண்ணி, 'இலை யொத்தன அவன் பாதம் பணிந்தவர்க்கு எண்ணுதற்கே' என அமைக்கின்றார் அந்தணச் சிரேட்டராகிய அன்பர் குலச் சிங்கம். ஆராய்ச்சி முற்றுப் பெறுகின்றது. இன்னிசையுடன் தாம் யாத்த கட்டளைக் கலித்துறையில் அமைந்த பாசுரத்தைப் பாடுகின்றார் பாவலருந் தமிழ் மறையின் பயன் கண்டு விண்ட பகவர். நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் செவிகளாரப் படுகின்றான் அப்பாவமுதை. அச்சீரிய பாசுரம் ஈதே.

“ அலையற்ற ஆரமுதக்கடல் அக்கட லுண்ட முகில்
விலையற்ற நன்மணிவெற்பு வெயில் நில வோங்குபகல்
துலையுற்றன வென்பர் தாமறைசூடுந் துழாய்முடியாற்கு
இலையொத்தன அவன்பாதம் பணிந்தவர்க் கெண்ணுதற்கே.”

[இது, தத்துவ நவநீதம் எனும் ரஹஸ்யத்தின் இறுதிப் பாசுரம்; தேசிக மாலையில் அமிர்த ரஞ்சனியின் ஆறாவது பாசுரமாகத் திகழும்.]

நாவலருந் தென் வடமொழி நற்பொருள் பெற்ற நம்பியே, 'வென்று விளம்பும் வேதியன்.' அவன் தாளே நற்றாள். அதனைத் தொழு தெழலே, சிற்றுயிர்க் குற்ற நற்பயன்.

கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனார்
பாதார விந்தமலர் பற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

‘மத் பக்த’ சப்தார்த்த விவரணம்

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், அட்வோகேட், கூடலூர்]

ஸ்ரீ பகவத் கீதை ஏழாம் அத்யாயம், 23-வது ச்லோகத்தில், ‘மத்பக்தா யாந்தி மாமபி’ என்கிற வாக்யத்தில் ‘மத்பக்தா’ என்கிறது, ‘ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ’ என்கிற நான்கு வித பக்தர்களையும் குறிக்கிறதா? அல்லது நான்காவதாகிய ஜ்ஞாநியை மாத்ரம் விவக்ஷிக்கிறதா? என்கிற ஶங்கை ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமியால் உத்தாபிதமாய், அதற்கு ஸ்ரீ. உப. வீரராகவாசார்ய ஸ்வாமியாலும் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியாலும் சில மாதங்களுக்கு முன்னல் ஸமாதானங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்விஷயத்தில் அபிப்ராய பேதம் இருப்பதாக ஆபாதத: தோன்றிய போதிலும், வஸ்து ஸ்திதியை நன்கு பராமர்ஶித்தால் ஐகரஸ்யமே புலப்படுகிறது.

இதற்கு முன் ச்லோகங்களில் ஸ்ரீ கீதாசார்யன், தேவதாந்தரங்களை ஒவ்வொரு பலனை உத்தேஶித்து ஆச்ரயிப்பவர்களுக்கும், அந்தந்தத் தேவதைகளின் மூலமாய்த் தாமே பலப்ரதாநம் பண்ணுவதாகக் கூறி, இந்த ச்லோகத்தில்,

> “அந்தவத்து ஃபலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம் ।
> தேவாந் தேவயஜோ யாந்தி மத்பக்தா யாந்தி மாமபி ॥”

என்று உபய விதமான அதிகாரிக்குமுள்ள பல தாரதம்யத்தைக் குறிக்கிறார்.

இந்தச் லோகத்தில் ‘மத்பக்தா:’ என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருந்தபோதிலும் ‘மாம் யாந்தி’ பல நிர்த்தேசம் செய்திருப்பதைக் கொண்டு, ஜ்ஞாநிகள் மட்டும் விவக்ஷிக், கப்பட்டதாகக் கொள்ளவேண்டும். அதுவே பாஷ்யத்திலும் அபிப்ரேதம் என்பது ஒரு பக்ஷம். கீதா ச்லோகங்களின் ஆநுபூர்வியைப் பார்த்தால், நான்கு வித பக்தர்களுமே விவக்ஷிக்கப்படுகிறார்கள் என்பது மற்றொரு பக்ஷம். இவ்விரண்டு பக்ஷங்களும் ஒன்றுக்கொன்று விருத்தமல்ல வென்றும், இரண்டும் கீதாசார்யனுக்கும் பாஷ்யகாரருக்கும் அபிமதமே யென்றும் தோன்றுகிறது. ‘தேவாந் தேவயஜோ யாந்தி’ என்றதால், தேவதாந்தரங்களைக் குறித்து யஜநம் செய்பவர் அந்தத் தேவதைகளை அடைகிறார்கள். அதாவது: அவர்களுடன் ஸமாந போகத்தை அடைகிறார்கள் என்று சொல்லப்பட்டது. இத்தால்: அந்தந் தேவதைகளால் கிடைக்கக் கூடிய பரமபலம் சொல்லப்பட்டது; இதற்கு அர்வாசீநமான பலம் இதில் அந்தர்க்கதமாகவாவது, இத்தால் உபலக்ஷிக்கப்பட்டதாகவாவது கொள்ளத்தகும். ஆனால் அது கண்டோக்த மல்ல.

இதே மாதிரி ‘மத்பக்தா அபி மாம் யாந்தி’ - என்றதால், பக்தர்கள் அடையக் கூடிய பரம பலமான பகவத் ஸமாந போகம் குறிக்கப்பட்டது. இதில் ததர்வாசீநமான ஐச்வர்ய கைவல்யங்கள் அந்தர்க்கதமாகவாவது அல்லது இத்தால் உபலக்ஷிதமாகவாவது நிர்வஹிக்கவேண்டியது அவச்யமாகிறது. இப்படிக் கொள்ளாத பக்ஷத்தில், ஐச்வர்ய கைவல்யங்களைக்கூடப் பக்தியோகம் அநுஷ்டிப்பவர்கள் ‘அல்பமேதஸாம்’ என்கிற ஶப்தத்தில் க்ரோடீகரிக்கப்படுவ ராகையால், அது சிறிதும் பொருந்தாது. பாஷ்ய வாக்யத்தின் ஆநுபூர்வியைக் கவனித்தாலும் இதுதான் அபிப்ராய மென்று ஏற்படுகிறது.

தேவதாந்தரயாஜிகளைப் பற்றி 'தேஷாம் ஸ்வல்பம் ஹாநம் ப்ரம்ஹாண்டே' என்று முடித்திட்டு, அநந்தரம் 'உதாரா: ஸர்வ' என்று ஆரம்பித்திருப்பதை நோக்கினுல், தமது பக்தர்கள் எல்லாரையும் ஸங்க்ரஹிப்பதாகவே தெரிகிறது. 'தேஷாம் ஏவ ஸ்வ அனுகம்பாயா அஹம் அஜ்ஞானஜம் தம: நாசயாமி' என்பது எல்லா பக்தியோகிகளுக்கும் ஸாதாரணம். பிறகு வரும்

"ஸம்ஸித்திம் பரமாம் கதா: ...
மாம் உபேத்ய து கௌந்தேய புனர்ஜன்ம ந வித்யதே"

என்கிறது ததா நீசைவ வா க்ருஷ்ணே ... வா எல்லா பக்தியோகிகளுக்கும் அந்வயிக்கக் கூடும். அதுவே அபிப்ரேத மென்பது ஸ்ரீமத் தாத்பர்ய சந்த்ரிகையிலிருந்து ஏற்படுகின்றது. அங்கு ஸ்ரீ நாராயணர்ய வாக்யங்களை அநுவாதம் பண்ணி, அதற்கு ப்ரமாண பல மிருப்பதை ஶாண்டில்ய ஸம்ஹிதா வாக்யத்தை எடுத்து மூதலிப்பித்தால், அது ஸ்வாமி தேசிகன் தமது ஸித்தாந்தமாகக் கொண்டதென்பது ஸ்பஷ்டமாகிறது. மேலும் அடுத்த ச்லோகத்தின் அவதாரிகையில் 'உதார' என்கிற பதத்திற்கு '... ' என்று அர்த்தம் கூறியிருப்பதும், பூர்வ ச்லோகத்தின் பாஷ்யத்தின் முடிவில் ப்ரஸ்தாவிக்கப்பட்டவர்கள் சதுர்வித பக்தர்கள் என்பதை த்ருடப்படுத்துகிறது.

தவிர: எட்டாம் அத்யாயத்தில் (8–13) ஐச்வர்யத்தையும் கைவல்யத்தையும் உத்தேசித்துப் பக்தி யோகாநுஷ்டாநம் செய்பவர்களின் நிர்யாண ப்ரகாரத்தையும் அவர்கள் அடையும் பலத்தையும் விவரிக்கு மிடத்தில், பாஷ்யத்தை நோக்கினுல் இங்குள்ள 'மாம் உபேத்ய' என்பது அவர்களையும் ஸங்க்ரஹிக்க கூடுமென்றே தோன்றுகிறது. கைவல்யார்த்தம் பக்தியோகம் செய்பவர்களும் 'புனர்ஜன்ம ந வித்யதே' என்பதற்கு விஷயமாகிறுர்கள் என்பதும் ஏற்படுகிறது. பகவானிடத்தில் ஏகாந்த பக்தி செய்பவர்கள் மற்ற பலன்களை முதலில் விரும்பியபோதிலும் உபாஸ்ய ப்ரபாவத்தை முன்னிட்டு க்ரமேண பரம நிச்ச்ரேயஸ்ஸைத் தவருமல் பெறுகிறுர்கள் என்பது வஸுதேவருடைய ஜந்மாந்தர கதையாலும், குசேலர் ஸௌபரி முதலியோருடைய வ்ருத்தாந்தங்களாலும் ஸித்திக்கிறது. இதை யெல்லாம் உத்தேசித்தே நாராயணர்யருடைய வ்யாக்யாநத்தைத் தாத்பர்ய சந்த்ரிகையில் அநுவதித்து ஸ்வாமி அதை இசைந்த தென்பது நன்கு புலப்படுகிறது.

'ஸர்வ' என்பதில் 'ஏவ' சப்தம் காகாக்ஷி ந்யாயமாய் 'உதாரா: ஏவ ஸர்வே' என்று அந்வயிப்பதும் பாஷ்யாபிப்ராயத்துக்கு விரோதிக்காது. 'தேவயஜ:' என்று யஜந கர்ம வைமுக்யமாகக் கூறி, 'மத்யாஜ: என்று பேசாமல், 'உதாரா:' என்றதால், அங்குக் கர்ம சரீரம் முக்ய மென்றும், இங்கு ஹாவ சுத்தியே அபேக்ஷித மென்றும் தேறுவதால், ஸ்வபக்தர்கள் விஷயத்தில் அவர்களுடைய பலாபிஸந்தி எதுவாயிருந்தாலும், தன்னிடம் அவர்களுக்குள்ள ப்ரேமையே பெரிதாகக் கொண்டு பகவான் திருத்திப் பணி கொள்கிறுன் என்று தேறி நிற்கிறது.

"ந மய்யாவேசித தியாம் காம: காமாய கல்பதே ।
பர்ஜிதா க்வதிதா தானா ப்ராயோ பீஜாய நேஷ்யதே ॥"

என்று கோப கந்யகைகளுக்குப் பகவான் அருளிச் செய்தது இதற்கு முக்யமான ப்ரமாணமாகும்.

... கற்பக நூலகம்
189280

ஸ்ரீ:

செய்திகள்.

ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கரின் திரு நக்ஷத்ர மஹோத்ஸவம்.

ஸ்ரீமதஹோபில மடம் திவ்யாஸ்தானத்தில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க் கேத்யாதி பிருதலங்க்ருத ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திரு நக்ஷத்ர மஹோத்ஸவம், தில்லஸ்தானம் ஸ்ரீ அஹோபில மடத்தில், தில்லஸ்தானம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனால் நிகழும் வ்யயஹு, தைமீ, 21உ (3—2—47) திங்கட்கிழமை யன்று வெகு ஸம்ப்ரமமாய்க் கொண்டாடப் பட்டது. உத்ஸவம் தைமீ, 19உ காலையிலேயே உபக்ரமிக்கப்பட்டு, வேத திவ்ய ப்ரபந்த க்ரந்த பாராயணங்களுடன் நடைபெற்றது. இவ்வுத்ஸவத்தை ஸேவிப்பதற்கென்று சென்னை பெங்களூர் முதலிய வெளி இடங்களிலிருந்தும், கல்யாணபுரம் ராயம்பேட்டை முதலிய சுற்றுப்பட்ட அக்ரஹாரங்களி லிருந்தும், அநேக திருநாமங்கள் ஸேவை ஸாதித்தனர். திங்கட்கிழமை யன்று காலை ஸ்ரீமடத்திலிருந்து ஸ்ரீமதாதி வண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனும், ஸ்ரீதிருக்குடந்தை அழகிய சிங்கரும் விசேஷ அலங்காரத்துடன் திருவீதி உத்ஸவம் கண்டருளி, உள்ளூர் ஸ்ரீநிவாஸப் பெருமாளையும் மடத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் முதலிய எம்பெருமான்களையும் மங்களாசாஸநம் செய்தருள, மர்யாதைகளும் நடந்தேறின. பிறகு சாத்துமறையும், அநந்தரம் ஸுமார் 400 திருநாமங்களுக்குத் ததீயாராதநமும் பண்ணப்பட்டன. கைங்கர்யங்களில் அந்வயித்தவர்களுக்கு உசிதமான ஸம்பாவனையும் அதன் பிறகு நடந்தேறியது.

ஸ்ரீ தில்லஸ்தானம் ஸ்வாமி 'ஸஜாதொயெந ஜாதெந யாதி வம்ஶஸ்ஸமுந்நதிம்' என்றபடி, ஸ்ரீ அஹோபில மடம் 24-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கல்யாணபுரம் அழகிய சிங்கரின் மஹத் குலத்தில் திருவவதரித்தவர்; ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் க்ருபைக்குப் பாத்ரர்; ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநக்ஷத்ரம் ப்ரதிவர்ஷமும் ஸ்ரீஸ்வாமியால், தாம் எழுந்தருளியிருக்கும் இடங்களிலெல்லாம் அந்யாத்ருசமான பக்தி ச்ரத்தையுடன், உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாய் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வுத்ஸவத்துக் கென்றே இவ்வர்ஷம் இங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரின் பூர்வாச்ரம குமாரரான ஸ்ரீ. உப. C. V. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி (B. A., B. L.,) இவ்வுத்ஸவத்தையும் ஸேவித்து, ஸ்ரீ ஸ்வாமியின் அசஞ்சலமான ஆசார்ய பக்தியையும் அடியார் திரளையும் கண்டு விஸ்மிதராய்க் கொண்டாடினர்

தில்லஸ்தானம் 4—2—47 } T. S. சேஷாத்ரி தாஸன்.

* * * *

ஸ்ரீ அஹோபில மடம், தோழுந்தூர்.

இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில், வித்வன்மணி ராமாயண பூஷணம் தென்பரை ஸ்ரீ உப. வேங்கட வரதாசார்ய ஸ்வாமியால் ப்ரவசநம் பண்ணப்பட்டுவரும் ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேப கட்டத்தில் சென்ற கார்த்திகைமீ. 30உ (15-12-46) "ஸ்ரீ ஸீதா கல்யாண மஹோத்ஸவம்" இவ்வூர் வாஸிகள் ஒத்துழைப்பாலும், ஸ்ரீ. உப. தார்மிக ரத்ந ப்ரதீப N. R. க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ. உப. சங்கரம்பாடி G. ஸ்ரீநிவாஸாசார்யர், மற்றும் வெளியூர் வாஸிகளான சில மஹான்கள், இவர்களுடைய த்ரவ்ய ஸஹாயத்தாலும் விசேஷ வைபவத்துடன் இனிது நடைபெற்றது.

அடுத்தபடி: ஷை ஸ்ரீமத் ராமாயண ப்ரவசநத்தில "ஸ்ரீபாதுகா பட்டாபிஷேகம்" தைமீ 6உ (19–1–47) ஞாயிற்றுக்கிழமை யன்று வெகு ஸம்ப்ரமமாக நடந்தேறியது. ஸ்ரீ. உப. T. S. ஸுந்தர மையங்கார் ஸ்வாமி, (B.A.,L.T.,) ஸ்ரீ. உப. G. ஸ்ரீநிவாஸா சார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. G. ஆராவமுதாசார்ய ஸ்வாமி, ராவ் ஸாஹிப் ஸ்ரீ. உப. D. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி முதலியோர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். தேவ ஸ்தாந ட்ரஸ்டியான ஸ்ரீ. உப. G. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, தாம் ஸொந்த உபயமாக 'வெள்ளிப் பாதுகை' செய்து ப்ரதிஷ்டை செய்வித்து, அதனை மங்கள வாத்யங்களுடன் ஸ்ரீ ஆமருவி யப்பன் ஸந்நிதியினின்றும் ஸகல மர்யாதைகளுடன் ஊர்வலமாக ஸ்ரீ மடத் துக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, காலக்ஷேபாநந்தரம் கோஷ்டியில் அதை ஸ்ரீ வித் வந்மணி ஸ்வாமிக்கு ஸம்பாவனை செய்தார். ராத்ரி 11-மணிக்குப் புராண ப்ரவசநம் முடிந்து கோஷ்டிக்குச் சந்தந தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு ஸதஸ் கலைந்தது.

ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதி திவ்யாஸ்தாநத்தில் மூர்த்தாபிஷிக்தர்களாய் எழுந்தருளி யிருந்த 40-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர் திரு நக்ஷத்ரமாகிய மார்கழி விசாகமும், 41-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர் திரு நக்ஷத்ரமாகிய மார்கழி பூரட்டாதியும், ப்ரக்ருதம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்திரமாகிய தை உத்திராடமும், சிஷ்ய கோஷ்டிகளால் ஸ்ரீ ஆமருவியப்பன் மாலை மர்யாதை ப்ரஸாதங்களுடன் வெகு விமர்சை யாகக் கொண்டாடப் பட்டன. இந்தத் திருநக்ஷத்ர மஹோத்ஸவ தினத்தன்று (22–1–47) ஸ்ரீ. உப. வித்வந்மணி ஸ்வாமியால் "ஆசார்ய வைபவம்" எனும் விஷயம் பரக்க உபந்யஸிக்கப்பட்டது.

R. நரஸிம்ஹாசார்யர்,
(ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ கார்யதர்சி)

* * * * * *

தஞ்சை ஜில்லா கல்யாண புரத்தில் திருக்கோயில் கொண் டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அலர்மேல் மங்கா ஸமேதனை ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமானுக்கு, ஜனவரி 28உ முதல் திருக்கல்யாண மஹோத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு, 26உ திவ்ய தம்பதிகளின் புஷ்பப் பல்லக்குப் புறப்பாடுடன் முடிவுற்ற தென்றும், அம்மஹோத்ஸவத்தில் அநேக ஸங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன வென்றும் ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அறிவிக்கிறார்.

* * * *

42-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 22–1–47-ல் **முக்கூர் அக்ரஹாரத்தில்** வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. மத்யாந்ஹம் ஆசார்ய ஸம்பாவனையும் விசேஷ ததீயாராதநமும் நடத்தப்பட்டு, ராத்ரி 'ஆசார்ய ப்ர பாவம்' என்னும் விஷயம் ஸ்ரீ. உப. வித்வான் மு. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் உபந்ய ஸிக்கப் பட்டது.

வேங்கடவரதாசார்யர் (மணியம்)

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

இக்காலத்திய க்ஷோபம்

ஸ்ரீ ஸந்நிதியில், 'மாலோல' வித்வத் ஸதஸ்ஸும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ரம் முதலிய மஹோத்ஸவங்களும் முடிவு பெற்றன, இப்பொழுது ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கொஞ்சம் விச்ரமத்தை அநுபவித்து வருகிறானே என்று நினைக்கும்படியாக இருக்கிறது. ஒருகால் அந்த விச்ரமத்திற்கு இடையூறாகச் சில ஸம்பவங்கள் நேர்ந்தாலும் நேரலாம். ஆலய ப்ரவேசத்தில் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் நமது ஸுஹ்ருத்துக்கள் மடம் முதலியவைகளில் ப்ரவேசியாமல் இருப்பார்களென்று விச்வஸித்திருக்க இடமுண்டோ? இம்மாதிரியான சாத்ர நிலயங்களும் இப்பொழுது ஏற்படுத்தப் போகும் சட்டத்திற்குக் கோசரமாகு மென்றே தோன்றுகிறது. ஒரு ஸந்நிவேசம் ஆலயமா அல்லவா வென்பதை நிர்ணயிக்க மாகாண ஸர்க்காருக்கு அதிகார முண்டு என்று அந்தச் சட்டத்திற் சொல்லி யிருக்கிறார்க ளன்றோ? அந்த சர்க்க மடங்களையும் இந்தச் சட்டத்திற்குக் கோசரமான ஆலயங்களாக சேர்த்து விட்டால் நாம் என்ன செய்யப் போகிறோம்? அப்பொழுது ஒருகால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் தனது யோக நித்ரையை விலக்கி "ஸாடாவடு ஷீஷணெ" என்னும்படியான அவதாரத்தை மீண்டும் ஒரு தடவை செய்து அதர்ம கார்யங்களை ஒழித்து, தர்மத்தை ஸ்தாபிக்குமாறு விசேஷித்த ஒரு உத்ஸாஹத்தை அவலம்பித்து அருளுவனோ? இல்லாவிட்டால் "ஹூஷஜவதி விதிஷ்தைக:" என்கிறபடி இந்தக் கேளியை அநுபவித்துப் புன்சிரிப்புடன் விலகி நிற்பனோ? என்ன செய்வான் என்பதை எவர் சொல்லக்கூடும்?

சிற்சில ஸமயங்களில் அவன் ஔதாஸீந்யத்தையும் வஹிப்பனென்று ப்ராஸ்த்நங்கள் சொல்லுகின்றன. அவனுடைய ஸங்கல்பமே நடைபெறும்.

* * * * * *

வேதாத்யயநத்தின் லோபம்

நாம் சென்ற ஸஞ்சிகையில் வேதாத்யயநத்தின லோபத்தைப் பற்றி ப்ரஸ்தாவித்திருந்தோம். அது அஸமக்ரமாக நின்றுவிட்டது. அதன் தொடர்ச்சியாக அதைப் பற்றி நாம் மறுபடியும் விசாரிக்க ப்ரவர்த்திக்கிறோம். ருக்வேத பாஷ்ய உபோத்காதத்தில், அத்யயநம் செய்து அதன் அர்த்தத்தை அறியாதவன் கேவலம் முட்டை சுமப்பவன் என்றும், அவன், கிளைகள் வெட்டப்பட்ட உலர்ந்த அடிமரம் போன்றவனென்றும், வேத பாஷ்யகாரர் நிந்தித்திருக்கிறார். 'தஷயீதெ தஷெ்ஷ' என்னும் பாணிநி ஸூத்ரத்தின் கீழ் மஹா பாஷ்யகாரரும் 'அர்த்தத்தை அறிவதே வேதநம் என்னும் சப்தத்தின் பொருள்' என்றும், 'சப்த ஸ்வரூபத்தை மாத்ரம் அறிவது வேதநமன்று' என்றும் விவரித்திருக்கிறார். பராஶர மாதவீயத்திலும்,

“ வெஉவஸ்ய வா஠ஶாத்ரேண ஸஞ்ஷோ வெ ஹவெஜ்ஜஃ ।
வா஠ஶாத்ராவஸாயீத வங்கெ மளஶிவ ஸீஉதி ॥ ”

[எவன் கேவலம் வேதத்தின் சப்த ஸ்வரூபத்தை மாத்ரம் க்ரஹித்து அதன் அர்த்தத்தை அறியாமலிருக்கிறானோ, அவன் சேற்றில் அகப்பட்ட மாடுபோல் க்லேஶத்தை அடைகிறான்] என்று எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வ்யாஸரும்,

“ வெஉாயஜ்ஜோ ஜவம் ஜவா தயெவாயஞ்யநம் ஜ்ஜஃ ।
ஊவரு ஸமூவவாவொதி நரகஞ்ஜ விவயஜெ ॥ ”

[வேதத்தை அர்த்தத்துடன் அத்யயநம் செய்கிறவன் நல்ல கதியை அடைகிறான்; அப்படி அத்யயநம் செய்யாதவன் நரகத்துக்குப் போகிறான்] என்று சொல்லியிருக்கிறார். இவையெல்லாவற்றையும் பார்த்தால், அர்த்த ஜ்ஞாநம் இராமல் கேவலம் சப்த ஸ்வரூபத்தை மாத்ரம் க்ரஹிக்கிறவனுக்கு வேதாத்யயநத்தால் எவ்வித ஃபலமும் இல்லையென்று ஏற்படுவது போலத் தோன்றும்.

ஆனால், இந்த விஷயத்தை ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய நமது ஆசார்யர்கள் தீர்க்கமாக விசாரித்து, “ஸ்வாயயாயொஉயெதவஃ” என்னும் விதி கேவலம் சப்த

க்ரஹணமும் ஃலவத்தானதே யென்பதை விளக்குகின்ற தென்று நிர்ணயித்திருக்கிருர்கள். பாலனுக்கு உபநயந காலத்திலோ ஸந்த்யோபாஸநாதி காலத்திலோ விதிக்கப்படும் உச்சாரணம் அக்ஷரபடநமே யன்ருே? 'ஸ்வாத்யாய' என்னும் சப்தமானது அர்த்த ஜ்ஞாநத்தைக் குறிக்கமாட்டாது; அது ஸ்வசாகை ஏகதேசத்தைக் குறிக்கும் ஶப்தமே அதை அத்யயநம் செய்வதால் அர்த்த ஜ்ஞாநம் ஸம்பவித்து விடுமா? அர்த்த ஜ்ஞாநத்திற்கு வேதாங்கங்களின் அத்யயநம் அபேக்ஷித மன்ருே? அப்படி அங்காத்யயநம் அப்ராப்தமாக இருக்குங் காலத்தில் விதிக்கப்படும் ஸ்வாத்யாய அத்யயந மானது, கேவலம் அக்ஷரபடநத்தையே குறிக்க வேண்டுமன்ருே? இவ்வாறு ஹேதுக்களைத் திருவுள்ளம் பற்றி ஸ்ரீ பாஷ்யகாரர் "ஸ்வாத்யாய நவிதிரக்ஷரராஶிக்ரஹணமாத்ரே வ்யவதிஷ்டதி" என்று ஸ்வாத்யாய சப்தத்திற்கு அர்த்த ஜ்ஞாந பர்யந்தத்வத்தை நிரஸநம் செய்தருளி யிருக்கிருர். இது வேத பாஷ்யகாரர் முதலானவர் சொல்லி யிருப்பதற்கு விருத்தமாக இருக்கிறதே என்று ஒரு கேள்வி பிறக்கக் கூடும். வேத பாஷ்யகாரர் முதலானவர்கள் செய்திருக்கும் நிந்தைக்குஅர்த்த ஜ்ஞாநத்தின் விஶேஷ மஹிமையை வெளியிடுவதில் தாத்பர்யமே யொழிய, கேவலம் அக்ஷர படநத்துக்கு நிஷ்பலத்வத்தை ஸ்தாபிப்பதில் தாத்பர்ய மில்லை யென்றே நாம் அறிய வேண்டும். தைத்திரீய ஆரண்யக வாக்யம்

"யெ சவஜ்ஞ-த வா வ-ஶாணெ வெதஂவிஷாஂஸஂஹிெதாவதஞி.........."

தஸ்ராத் ஸ்ராஹ்மணெ ஷெயாா வெதவிஂஹ்யா திவெதிவெ நஜஸ்க-யஜாஸ"

என்று வேதவித்தான ப்ராஹ்மணனுடைய மஹிமையை உத்கோஷிக்கிறது. இந்த வாக்யத்திற் சொல்லப்படும் 'வேதநம்' அர்த்த ஜ்ஞாநத்தை விஷயமாக உடையதென்று சொல்வதற் கிடமில்லை. ஏனென்ருல்: வித் தாதுவானது அக்ஷர ஜ்ஞாநம் மாத்ரத்தையும் குறிக்கு மென்பதற்கு ஆதார மிருக்கிறது. சாந்தோக்யம் ஏழாவது ப்ரபாடகத்தில், நாரதர் ஸநத்குமாரரைப் பார்த்து, 'ஓ பூஜ்யரே! நான் கேவலம் சப்தஜ்ஞாநம் உள்ளவனுக மாத்ரம் இருக்கிறேன்; ஆத்ம ஜ்ஞாநம் உள்ளவனுக இல்லை' என்பதை வெளியிடு மிடத்தில், 'ஸோஹம் மந்த்ரவிதேவாஸ்மி, நாத்மவித்' என்னும் வாக்யம் தென்படுகிறது. அவ்விடத்தில் 'மந்த்ரவித்' என்பதிலுள்ள 'வித்' தாதுவானது சப்த ஜ்ஞாநத்தைக் குறிக்கிற தென்றே அங்கீகரிக்க வேண்டும். அது போலவே இவ்விடத்திலும் எடுத்துக் கொள்வதற்கு என்ன ஆக்ஷேப மிருக்கக்கூடும்?

இப்படி ஸ்ரீ பாஷ்யகாரர் நிர்ணயத் திருப்பதையே ஆதாரமாகக் கொண்டு நமது பெரியோர்கள் கேவல சப்த க்ரஹணத்தை ஆதரித்து வாந்தார்கள். அது நமக்கு விசேஷித்த க்ஷேமத்தையும் செய்து கொண்டு வந்தது. இதை அறிந்து கொள்ளாமல் நாம் அத்யயநத்தைக் கைவிட்டோமே என்பதுதான் நமக்கு அள வற்ற சோகத்தை ஜநிப்பிக்கின்றது. வேத கோஷ்டியில் வேத வித்துக்களால் செய்யப்படும் வேத கோஷத்தைக் கேட்டவர்கள் அந்தக் கலை க்லாநமாகப் போவதைப் பற்றிச் சோகியாம லிருக்க மாட்டார். அதன் காம்பீர்யமும் அழகும் அப்படிப்பட்டவை. அப்படிப்பட்ட அநர்க்கமான வஸ்துவை இழப்ப தென்றால் எவருக்குத்தான் அது ஸஹ்யமாகும்? ஜந்மாந்தர ஸுக்ருத வசத்தால் இதில் விசேஷித்த ச்ரத்தையைக் காட்டி வந்த நாட்டுக்கோட்டைச் செட்டி மார்களும் இதை இப்போழுது கைவிட்டு விட்டார்கள். என்ன செய்யலாம்? காலத்தின் கொடுமையே இந்தத் துர்த்தசைக்குக் காரணம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
189220

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1947-ம் வருஷத்து ஜனவரி மாதத்துச் சந்தா வரவு.

30	ஸ்ரீ	K. வீரராகவவையங்கார், நாமக்கல்	6	0
41	,,	ராவ்ஸாஹிப் W. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்	3	0
57	,,	N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மதுரை	3	0
58	,,	C. N. ஸ்ரீநிவாஸகோபாலாசார்யர், ஸ்ரீரங்கம்	3	0
73	,,	J. வரதராஜையங்கார், திருநெல்வேலி	3	0
74	,,	P. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பெங்களூர்	3	0
75	,,	T. S. நரஸிம்ஹாசார்யர், மாயவரம்	3	0
80	,,	S. வேங்கடரங்க ஐயங்கார், ஆத்தூர்	3	0
90	,,	C. V. ராஜகோபாலாசார்யர், ஸ்ரீரங்கம் ...	3	0
177	,,	S. A. ராஜகோபாலய்யங்கார், ஆடுதுரை	5	0
186	,,	P. V. ராமஸ்வாமி ஐயங்கார், மதுரை ...	3	0
240	,,	ராவ்ஸாஹிப் D. ஸ்ரீனிவாஸையங்கார், கும்பகோணம்	6	0
289	,,	V. S. ரங்காசார்யர், கோயம்புத்தூர் ...	1	0
294	,,	I. ஸ்ரீனிவாஸாசார்யர், சைதாப்பேட்டை ...	1	0
412	,,	S. நாராயணையங்கார், உளுந்தூர்ப்பேட்டை ...	3	0
419	,,	K. பார்த்தஸாரதி ஐயங்கார், பண்ருட்டி	3	0
422	,,	E. R. சக்ரபாணி ஐயங்கார், திருமங்கலம் ...	3	0
448	,,	S. ஆழ்வார் ஐயங்கார், திருநெல்வேலி டௌன் ...	3	0
451	,,	K. R. ஸ்ரீநிவாஸன், தென்னூர் ...	3	0
464	,,	A. வேங்கடாசாரியர், கல்கத்தா ...	8	0
529	,,	R. ஸ்ரீனிவாஸையங்கார், திருப்பத்தூர்	5	0
619		K. கநகவல்லி அம்மாள் தேனாம்பேட்டை	3	0
649	,,	A. V. V. மணவாளாசார்யர், திருவனந்தபுரம்	3	0
676	,,	க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், தஞ்சாவூர் ...	3	0
690	,,	அலமேலு - ஜகந்நாதன் ...	3	0
701	,,	K. க்ருஷ்ணஸ்வாமி, மயிலாப்பூர் ...	3	0
707	,,	G. சௌரிராஜையங்கார், கோபாலஸமுத்ரம் ...	3	0
716	,,	K. பத்மநாபையங்கார், திருவனந்தபுரம் ...	3	0
756	,,	K. ஜகந்நாதையங்கார், பம்பாய் ...	3	0
		P. R. ரங்கஸாமி ஐயங்கார், கோயம்புத்தூர்	3	0
		ரூ.	100	0

Regd. M. 4437.

OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1947
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ.	மற்றவர்கட்கு ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8	0–12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி) ...	1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8	0–12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை,

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.